# நிமிர்வு

facebook.com/nimirvu

www.nimirvu.org

பார்வை – 5 | ஆனி, 2017 | பக்கங்கள் – 24 | விலை – ரூபா 20.00



## இராஜதந்திரப் போர்?




## மாற்றுத்திறனாளிகளின் கருவி



## ஈழத் தமிழர்கள் மீதான இந்திய மத்திய அரசின் துரோகம்




# தேசியத்தின் குறியீடு

ஆராயும் அறிவே நிமிர்வு

# ஈழத் தமிழர்கள் மீதான இந்திய மத்திய அரசின் துரோகம்




**"கட்டுக்குள் நின்றால் சரி, எல்லைக்கோட்டை மீறினால் தட்டி வை" என்ற அடக்குமுறை வடிவத்தை இப்போது இந்திய அரசு கையிலெடுத்துள்ளது. இது இன்னொரு அரசியல் காலகட்டத்திற் குள்ளான பிரவேசமாகவே தெரிகிறது"**

– தமிழகத்திலிருந்து மணிகண்டன் –

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த ஈழத்தமிழர்களுக்காக மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்திய மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி உட்பட நான்கு பேர் மீது, குண்டர் சட்டத்தை ஏவி சிறையில் அடைந்துள்ளது தமிழக அரசு. திருமுருகன் காந்தி உள்ளிட்ட தோழர்கள் மீதான கைதுக்கு எதிராக தமிழ்நாட்டிலும், இந்தியா தாண்டியும் போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் திருமுருகன்காந்திக்கு ஆதரவாக போராட்டம் இடம் பெற்றது.

**தமிழ்நாட்டை தளமாகக் கொண்டியங்கும் இளந்தமிழக இயக்கத்தை சேர்ந்த சரவணக்குமார் கருத்து தெரிவிக்கையில்,**

2009 இறுதிப்போரில் ஈழத்தில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி கிடைக்காமல் செய்யும் நோக்குடன் இந்திய, இலங்கை அரசுகள் இன்னமும் இணைந்து செயல்படுவதையே இந்த அடக்குமுறை கைதுகள் வெளிக்காட்டுகின்றன.

மேலும் பா.ஜ.க அரசு தொடர்ந்து மக்களுக்கு எதிராக செயல்படுவதை எதிர்த்து தமிழ்நாட்டில் எழும் தன்னெழுச்சியான போராட்டங்களை தடுக்கவும், போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களை மிரட்டவுமே இது போன்ற கடுமையான அடக்குமுறை சட்டங்களை தோழர்கள் மீது இந்த அரசுகள் ஏவியுள்ளன.

ஈழத்தமிழர்களின் இன அழிப்புக்கான நினைவேந்தல் ஒன்று கூடலுக்கும், ஈழத்தமிழர்களின் நீதிக்கான போராட்டத்துக்கு துணை நிற்கும் தமிழ்நாட்டு மக்களை ஒடுக்க முயலும் இந்திய அரசின் அடக்குமுறையை, வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

**தமிழக அரசியல் செயற்பாட்டாளர் செந்தில் கருத்து தெரிவிக்கையில்,**

2009 முள்ளிவாய்க்கால் பேரழிவு தமிழகத்தை ஆன்ம விழிப்படையச் செய்தது. அது இலட்சக்கணக்கான இளைஞர்களை தமிழ்த் தேசிய அரசியல் களத்திற்கு இழுத்து வந்தது. தீக்குளித்து சாகும் கொந்தளிப்புகள் நடந்த பின்னணியில், பேரழிவுக்குப் பின்னான நிலையில் அன்றாடம் பெருகத் தொடங்கிய அடையாளப் போராட்டங்களை அரசு அனுமதித்த வண்ணம் இருந்தது. சர்வதேச அரசியல், இந்திய அரசின் துரோகம், தமிழ்த் தேசம், இயற்கை வளங்கள், சூழல் காப்பு, மரபுரிமை மீட்பு என அனைத்துத் தளங்களிலும் போராட்டங்களும் விழிப்புணர்வு பிரச்சாரங்களும் புற்றீசல் போல் பெருகின. இந்த அளவு மாற்றம் ஒரு பண்பு மாற்றத்தை அடைந்ததற்கான குறியீடுதான் இவ்வாண்டு தொடக்கத்தில் நடந்த ஜல்லிக்கட்டுப் போராட்டம். டாஸ்மாக் எதிர்ப்புப் போராட்டங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

இன்னொருபுறம் இந்திய ஆளும் வர்க்கத்தின் மூர்க்கமான பிரதிநிதியாக ஆட்சியில் அமர்ந்திருக்கும் மோடி அரசின் குறிப்பிடத்தகுந்த பொருளாதாரச் சீர்த்திருத்தங்கள். ஒரே தேசம், ஒரே சந்தை, ஒரே வரி, ஒரே தேர்வு, ஒரே மொழி, ஒரே உணவுக் கலாச்சாரம், ஒரே தேர்தல், ஒரே கட்சி என்பதே அதன் திசை வழி. 2009க்குப் பின்னான வளர்ச்சிப் போக்கில் தமிழகத்தில் உருவாகியுள்ள அரசியல் நிலைமை இந்த திசை வழிக்கு முட்டுக் கட்டையாக விளங்குகிறது. குறிப்பாக அரசின் கொள்கை

களை அம்பலப்படுத்துவதற்கு தேவையான பிரச்சார பலம் புதிய அரசியல் ஆற்றல்களால் பன்மடங்கு பெருகி இருப்பதை அரசு அச்சுறுத்தலாக கருதுகிறது. ஏனெனில், இவை பிரச்சாரத்தோடு முடிந்துவிடப்போவதில்லை. இந்த முட்டுக்கட்டைகளை விலக்கிப் போட வேண்டிய காலத் தேவை அரசுக்கு உள்ளது. எனவே, 2009 இல் இருந்து 2017 வரையிலான காலகட்டத்தில் புதிய அரசியல் சக்தி களின் பால் கடைப்பிடித்து வந்த "ஒரு நாள் கைது அணுகுமுறையை" முடிவுக்கு கொண்டு வந்துள்ளது அரசு. அதற்கிசைவாக வளைந்து கொடுத்து நிற்கக் கூடிய பொம்மை அரசாக தமிழக அரசு இருப்பது கூடுதல் வசதியாகியுள்ளது. இந்த எட்டாண்டுகளில் தெளிவாக வரையறுக்கப்பட்ட கொள்கை சட்டகத்திற்குள் பன்னெடுங் காலம் செயல்பட்டுவரும் பெரியாரிய, மார்க்சிய, தமிழ்த் தேசிய இயக்க ஆற்றல்கள் மீது மட்டுமே தேசப் பாதுகாப்புச் சட்டம், குண்டாஸ் சட்டப் பிரயோகங்கள் இருந்து வந்தன. இக்காலப்பகுதியில் புதிதாக அரசியல் களத்திற்கு வந்த இளைஞர்களை கைது செய்தல், தளைப் படுத்தல் என்ற அடக்குமுறைகளுக்கு அரசு உட்படுத்த வில்லை.

"கட்டுக்குள் நின்றால் சரி, எல்லைக்கோட்டை மீறி னால் தட்டி வை" என்ற அடக்குமுறை வடிவத்தை இப்போது அரசு கையிலெடுத்துள்ளது. இது இன்னொரு அரசியல் காலகட்டத்திற்குள்ளான பிரவேசமாகவே தெரிகிறது. பணமதிப்பிழக்கத்திற்கு எதிராக மேடவாக்கத்தில் நடந்த போராட்டத்தில் கட்டவிழ்க்கப்பட்ட காவல்துறை வன்முறை, ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் காவல்துறையின் ரவுடித் தனமும் கைதுகளும், தோழர்கள் திருமுருகன், டைசன், அருண், இளமாறன் மீதான குண்டாஸ் சட்டப் பிரயோகம், கதிராமங்கலத்தில் பேராசிரியர் செய ராமன் உள்ளிட்டோர் கைது, தோழர் முகிலனுக்கு கூடங் குளம் வழக்கில் ஆஜராக உத்தரவு என இப்புள்ளிகளை இணைத்துப் பார்த்தால் தமிழக அரசியலை மேலும் தீவிரப்படுத்தும் அடுத்தக் கட்டத்திற்கு காலம் நகர்வது தெளிவாகிறது. மத்திய அரசு தனது மூர்க்கமான கொள் கைச் சீர்த்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி முன்செல்ல தடையாய் இருக்கும் சக்திகளை அடக்க வேண்டியதே இக்கைதுகளின் நோக்கம். அதற்கு முகங்கொடுத்து முன்னேறிச் செல்ல வேண்டியதே நமது தேவை. அதில் பிரச்சார பலம் மட்டுமின்றி, மக்கள் அடித்தளத்தைக் கொண்ட கட்டமைப்பு ரீதியான பலத்தை மக்கள் முகாம் உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவையை இக்கைதுகள் உணர்த்துகின்றன. அரசின் மக்கள் விரோதக் கொள்கைக்கு எதிரான மாற்றுக் கொள்கைக்கான சமூக அடித்தளம் கொண்ட இயக்க வளர்ச்சிப் போக்கே மக்களைப் பொறுத்தவரை அடுத்தக் கட்டமாகும்.

தண்ணீரில் அழுத்தப்படும் காற்றுள்ள பந்து மூழ்காது, மேலெழும்பி வரும் என்பது இயற்பியல். போராடும் ஆற்றல்கள் மீதான அரச அடக்குமுறைகள் அடிபணியச் செய்யாது, அரசின் அடித்தளத்தை ஆட்டங் காண வைக்கும் என்பது சமூக அறிவியல் என்றார்.



**அரசியல், மனிதவுரிமைச் செயல்பாட்டாளர் கணேஸ் கருத்து தெரிவிக்கையில்,**

தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் கொஞ்சம் கட்டுக்கோப்புடன் மற்றும் கட்சி அரசியல் சாராமல் செயல் பட்டுவரும் அமைப்பாக மே 17 இயக்கம் இருந்து வரு கிறது. கடந்த காலங்களில் இந்திய அரசின் பல விசமத் திட்டங்களை எதிர்த்துப் போராடி மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தும் வேலைகளை மே 17 இயக்கத்தினர் செய்து வந்தனர். குறிப்பாக தோழர் திருமுருகன் அவர்கள் நேரலை விவாதங்கள் மூலம் ஆளும் பாஜக அரசின் முகத்திரையை கிழித்துக் கொண்டிருந்தார். இப்பொழுது தமிழகத்தில் நடக்கும் பொம்மை ஆட்சியில் யார் ஆளுமை செலுத்துகிறார்கள் என்பது உலகம் அறிந்தது. மக்கள் மன்றத்தில் நற்பெயர் பெற்றுவரும் தோழர் திருமுரு கனின் வளர்ச்சி பொறுக்காமல் ஏற்பட்ட அச்சம் மற்றும் கசப் புணர்வின் வெளிப்பாடே இந்தக் கைது என்றார்.

**ஊடகவியலாளரும், கேலிச்சித்திரக் கலைஞரு மான பாலா கருத்து தெரிவிக்கையில்,**

2009 யுத்தத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழர்களின் கொடூரத்தை மறக்கவிடாமல் தமிழர் களிடையே தக்க வைப்பதில் மெரினாவில் நடை பெறும் நினைவேந்தல் நிகழ்வுக்கு முக்கிய பங்குண்டு. ஈழப்படுகொலைக்குப் பின் தமிழர்களிடையே ஏற்பட்டி ருக்கும் ஒரு எழுச்சியும், மெரினா ஜல்லிக்கட்டு தை புரட்சி நிகழ்வு ஆகியவை ஒரே மொழி ஒரே தேசம் என அகண்ட பாரத கனவில் இருக்கும் ஆரியத்துவ கும்பலின் அரசிய லுக்கு எதிரானது. திருமுருகன் உள்ளிட்டோரை குண்டர் சட்டத்தில் கைது செய்வது என்பது பொதுத்தளத்தில் ஆர்வமாக இயங்கும் புதிய தலைமுறைக்கு ஒரு உள வியல் யுத்தத்தை உண்டு பண்ணும் செயல். இதன் மூலம் புதியவர்களை களத்திற்கு வரவிடாமல் தடுக்கலாம் என்று நினைக்கிறது இந்தியம். இதற்கு எதிராக அனை வரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றார்.

லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.Nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# விழித்திருக்கும் தேசியம்

அண்மைய பேரெழுச்சிகள் தமிழ் மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள் என்பதனையே காட்டு கின்றது. முதலமைச்சர் மீதான தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளை வெறுமனே அண்மைய குறித்த சம்பவங்களோடு மட்டும் தொடர்புபடுத்தி பார்ப்பது ஏற்புடையதன்று.

இது வடக்கு மாகாண சபையை முதல மைச்சர் ஏற்ற தினத்தில் இருந்து தாங்கள் எதிர் பார்த்தது போல ஒரு பொம்மை அரசாக அதனை நடத்திச் செல்ல முடியாது என்ற நிலைமைகளின் தொடர்ச்சியாகவும், தமிழர்களை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு சிறு சிறு குழுக்களாகவும், துண்டுகளாக்கவும் ஆக்கினால் அவற்றை இலகுவாக கையாளலாம் என்கிற இலங்கை, இந்திய அரசு மற்றும் மேற்குலகின் முடிவும் தான் கடந்த வாரங்களில் இறுதி வடிவம் பெற்றன.

தமிழ்த் தேசியத்தைப் பற்றி நின்ற தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் அவர் களுக்கு மாற்றாக சிறந்த ஆளுமையும், நேர்மை யும், உறுதியும் இல்லாத கைப்பாவைகளையே சிங்கள அரசும், இந்தியாவும், மேற்குலகும் விரும்புகின்றன. தமிழர்களின் இனநலன் சார்ந்து சிந்திக்காமல் எல்லாவற்றுக்கும் “ஆமாம் சாமி” போடுகிற அடிமைகளையே அவர்கள் விரும்பு கின்றார்கள்.

2009 க்குப் பின்னரான காலகட்டம் தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமானது. ஒரு இனத் தின் கட்டமைப்பையே சிதறடித்து நடுத்தெருவில் விட்ட பின்னர், சில உதிரிகளை வைத்து தமிழ் மக்களை அடிமைகள் போல நடத்தலாம் என்று பகல் கனவு கண்டது சிங்கள அரசு. கடந்த வாரம் நடந்த நிகழ்ச்சிகளினால் அவர்களின் நலன்சார் சக்திக-ளின் தலையில் விழுந்தது மண் என்று தான் சொல்ல வேண்டும்.

உறுதியான தலைமை ஊடாக மட்டுமே தமிழினத்தை ஒருங்கிணைக்க முடியும். தமிழினம் சின்னாபின்னமாவதை தடுத்து நிறுத்தவும் முடியும். முதலமைச்சருக்கான ஆதரவுப் போராட்டத்தில் 2009 இலிருந்து இப்போது வரையான தமிழர் அரசியல் நிலை தொடர்பிலான அம்பலப்படுத்தல்களை மேற் கொள்வது அவசியமானது. இதனூடாக இன்றைய தமிழர் தாயகத்தின் அரசியல், சமூக நிலை தொடர்பில் சிறு கிராமத்தில் வாழும் தமிழ் மக்கள் வரை விழிப்புணர்வை ஊட்டுதல் அவசிய மானதாகும்.

சம்பந்தன், ரணில், மைத்திரி, இந்தியா மேற்குலகு என்கிற கூட்டு நிகழ்ச்சி நிரலில் இருந்து வெளியே வந்து தமிழ்த் தேசிய அரசி யலை தொடரும் நோக்கோடு தமிழ்மக்களின் நலன்சார் முடிவுகளை எடுத்த விக்கினேஸ்வரனை அரசியல் அரங்கில் இருந்தே அகற்றுவது என கங்கணம் கட்டிக் கொண்டு இறங்கியவர்கள் செய்த வேலை தான் நம்பிக்கையில்லாப் பிரே ரணை. அதற்கெதிராக தமிழ் மக்கள் ஒற்றுமை யுடனும், தன்னெழுச்சியுடனும் பெரும் எதிர் வினையாற்றியமை தான் வரலாற்றுப் பதிவு. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று சொல்வார்கள். நாம் தமிழ்த் தேசியத்தில் உறுதி யாகவும், ஒற்றுமையாகவும் இருக்கும் வரை எம்மை யாராலும் கூறு போட முடியாது. அதே வேளை, முதலமைச்சர் உட்பட அரசியல் தலை மைகள் அனைவரிடமிருந்தும் நேர்மையையும் ஜனநாயகத்தையும் வலியுறுத்திய வண்ணம் இருக்க வேண்டும்.

**விழிப்பாய் இருப்பது ஒன்று தான்**
**விடுதலைக்கு முதல்படி.**

- செ. கிரிசாந் -

## நிமிர்வு வாசகர்களே
தொடர்புகளுக்கு...

**தபால் முகவரி:**
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**

மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com

அட்டைப்படம் : ஐங்கரன் சிவசாந்தன்

# மாற்றுத்திறனாளிகளின் கருவி










துருவன்

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போர் ஏராளமான மாற்றுத்திறனாளிகளை உருவாக்கி விட்டுள்ளது. போருக் குப் பின்னர் உருவாகியுள்ள பெரும் மாற்றுத்திறனாளி சமூகம் தொடர்பில் நாம் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டும். அந்தவகையில் இலங்கையின் வடக்கில் யாழ்ப்பாணத்திலிருந்து செயற்பட்டு வரும் "கருவி" நிறுவனம் முக்கியத்துவம் பெறுகிறது.

மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையமான கருவி 2013 யூன்மாதம் 12 ஆம் திகதி வலுவிழப்புடன் கூடிய நபர்களை சமூகவிருத்தியின் ஆரோக்கியமான பங்காளராக்கும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தில் பார்வைக் குறைபாடுடையோர் செவிப் புலன் பாதிப்புடையோர் கை கால் பாதிப்புக்குள்ளானோர் மற்றும் மனவிருத்தி குன்றிய 354 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

இந்நிறுவனத்தின் உருவாக்கத்தின் அவசியம் குறித்து கருவி மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையத் தலைவர் திரு.க.தர்மசேகரம் கருத்து தெரிவிக்கையில்,

வலுவிழந்தோருக்கான பணிகளை பல்வேறு நிறு வனங்கள் செய்து வருகின்ற வேளை இப்படியான ஒரு நிறு வனத்தை தோற்றுவித்ததன் முக்கியத்துவம் என்ன வென்றால் யுத்தம் நடந்த பிற்பாடு வலுவிழப்புடன்கூடிய நபர்கள் தொடர்பான ஒரு காத்திரமான செயற்பாட்டு பொறிமுறை ஒன்று உருவாக்குவதற்கான தேவைப் பாடு உணரப்பட்டது. வெறுமனே தற்காலிகமான வசதிப்படுத்தல்களோடு திருப்தி கொள்கிற ஒரு சமு தாயத்தை நாங்கள் தோற்றுவிப்பதாக இல்லாமல் நிரந் தரமான வாழ்வாதார மேம்பாட்டுப்பணிகளை முன்னெடுப் பதும் அதனூடாக வலுவிழப்பினோடு கூடிய நபர்களின் சமூகப்பங்களிப்பை அதிகரிக்கச் செய்தலும் என்ற அடிப் படையிலேயே கருவி மாற்றுத்திறனாளிகளின் வலு வளநிலையம் தோற்றுவிக்கப்பட்டது.

ஏற்கனவே நாங்கள் கூறியது போன்று யுத்தம் நடந்த காலத்திலும் அதற்குப் பின்னரும் வலுவிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்தது யாவரும் அறிந்த உண்மை. யுத்த காலத்தின் போது தமிழ் சமூகத்தில் அங்கவீன முற்றவர்களுக்கான பணிகள், ஏற்பாடுகள் முறை யாக பேணப்பட்ட நிலைமை இருந்திருக்கின்றது. ஆனால் யுத்தத்திற்கு பின்னர் அவர்கள் தங்களைத் தாங்கள் காத்துக் கொள்வதும் சமூகத்திற்கு பயனுடையவர்களாக வாழ்தல் என்ற அடிப்படையும் அற்றுப்போன ஒரு நிலைமை இருந்தது.

பல குடும்பப் பிணக்குகள் வலுவிழந்தோரைச் சார்ந்து எழுந்தன. ஏனென்றால் அடிப்படையில் அவர் களுடைய பொருளாதார நிலைமைகள் சார்ந்தும் அவர் களுடைய இருப்புச் சார்ந்தும் ஏற்பட்ட பிரச்சனைகள் அவர் களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை பாதிந்திருந்ததை நாங்கள் அவதானித்திருந்தோம். எனவே இவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஒரு காத்திரமான செயல்நிறை பொறிமுறையாகத் தான் நாங்கள் இந்த கருவியைக் கண்டோம்.

கருவி என்கின்ற பெயரைச் சூட்டியதன் முக்கியத் துவம் என்னவென்றால் சமூகப் பணிகளை மேற்கொள் வதற்கான ஒரு கருவியாக எப்பொழுதும் திகழ வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் நாங்கள் இந்த கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வளநிலையம் என்று வைத்தோம். வெறுமனையே வலுவிழந்தோர் சேவைபெறுனர்களாக இல்லாமல் சேவை வழங்குனர்களாகவும் அவர்களை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்கான கட்டுமான வசதிப் பாடுகளையும் உள்கட்டுமான வசதிப்பாடுகளையும் எமது நிறுவனம் கொண்டிருக்கின்றது.

இது பதினொரு பேரைக் கொண்ட ஒரு பரிபாலன சபையால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. போசகர்கள் இருக்கிறார்கள்.

அதேபோன்று வளவாளர் சபை ஒன்றும் பொதுச் சபையும் இருக்கின்றது. இவ்வாறான கட்டமைப்பின் பின்னணியிலேதான் எமது நிறுவனத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது அங்கத் தவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள், வட்டியற்ற கடன் உதவிகள், எமது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக் கான கற்றல் வசதிப்படுத்தல்கள் மற்றும் வலுவிழந் தோர் சமூகம் சார்ந்த விழிப்புணர்வு கருத்தரங்குகள், வலு விழப்புடன் கூடியவர்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

எங்களுக்கு தெரிந்த வரை வலுவிழந்தவர்களுக் கான தகவல்களையும் செய்திகளையும் பொதுவிட யங்களையும் ஆராய்ந்து வெளியிடும் நோக்கில் "வலு" என்கிற பெயரில் காலாண்டு சஞ்சிகையினையும் வெளி யீடு செய்து வருகிறோம். அதே போன்று கருவி பட்டி மன்றக் குழு ஒன்று இருக்கின்றது. அந்த பட்டிமன்றக் குழுவினுடைய பங்கு பற்றுனராக வலுவிழந்த நபர்கள் இருப்பார்கள். இந்த பட்டிமன் றத்தின் ஆற்றுகையூடாக சமூகம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத் தல் எங்களுடைய பிரதான நோக்காக இருக்கின்றது.

ஆலயவிழாக்கள், கலை கலாசார விழாக்களில் இந்த பட்டி மன்ற ஆற்றுகைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதே போன்று "இராகஸ்ருதி" இசைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின் றது. இந்த இசைக்குழுவின் ஆற்றுகைகளும் ஆலய விழாக்கள், கலை கலாசார நிகழ்வுகளின் போது நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்த ஆற்றுகைகளி னூடாக கிடைக்கின்ற நிதியினுடைய ஒருபகுதி அதில் பங்கு பற்றுனர்களுக்கும் ஏனைய மிகுதிப்பகுதி எமது நிறுவனத்திற்கும் வந்து சேர்கின்றது. அதனூடாக எமது நிறுவனத்தின் பல்வேறுபட்ட பணிகளையும் முன்னெடுக் கக்கூடியதாக இருக்கின்றது.

இதேபோன்று உற்பத்தி சந்தைப்படுத்தல் போன்ற அலகு ஒன்றை நாங்கள் ஸ்தாபித்திருக்கின்றோம். இது ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படை வலுவிழந்தவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்குவது. சந்தைப்படுத்தல் களிலும், உற்பத்தித்துறையிலும் வேலைவாய்ப்பை வழங்கு வதாக இருக்கின்றது. தற்போது அந்தப் பிரிவினூடாக "சைன்– Shine" என்கின்ற பெயரிலான திரவசலவை சவர்க் காரமொன்று உற்பத்தி செய்து சந்தைப்படுத்தப்படுகின்றது. உற்பத்தி பகுதியிலும் சந்தைப்படுத்தலிலும் தற்போது 12 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வாழ்வாதாரத்திற்கு இந்த செயற்திட்டம் மிகவும் உதவிக் கரமாக இருக்கின்றது. இவற்றை நாங்கள் மேலும் அபி விருத்தி செய்யவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

தற்போது எங்களுடைய அங்கத்தவர்களு டைய 27 பிள்ளைகளுக்கு கற்றல் வசதிப்படுத்தல்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு தனிநபர் ரீதியாகவும் சில அமைப்புக்கள் ரீதியாகவும் மாதாந்தம் உதவிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கருவி சமூகவள நிலையத்தினுடைய பணிகள் அனைத்தும் நலன்விரும் பிகள் அன்பர்கள் ஆர்வலர்கள் கொடையாளர்களின் அயராத பங்களிப்புடனேயே முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எமது நிறுவனம் பதிவு செய்யப்பட்ட முறைப்படுத்தப்பட்ட வகையில் ஒரு கட்டமைப்பைக் கொண்ட நிறுவனமாக இருக்கின்றது.

**"சமூகப்பணிகளோடு ஈடு பாடும் அக்கறையும் கொண்டு உதிரிகளாக வாழ்ந்தவர்களை கூட்டிணைத்து செய்யப்பட்ட ஒரு முயற்சிதான் இந்தக் கருவி"**

நாங்கள் தற்போது தற்காலிகமான இரண்டு வீடு களில் தான் எமது செயற்பாடு களை முன்னெடுத்து வருகின் றோம். எமது செயற்பாடுகளை நிரந்தரமான இடத்திலேயே நிறுவுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறோம். அதற்கான 30 பரப்புக் காணியொன்றையும் தெரிவு செய்துள்ளோம். இந்தக் காணியை சதுர அடிகளாக வகுத்து ஒரு சதுர அடிக்கு இலங்கை ரூபாய் படி 140 ரூபா என்ற வகையில் அந்த செயற் திட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பகுதி யளவான நிதி அதற்காக சேர்க்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்திக்கு அருகி லுள்ள எமது நிறுவனத்துக்கு நேரடியாக விஜயம் செய் தால் எமது பணிகளை நேரடியாக காணக்கூடியதாக இருக்கும். karuvi.org என்ற எமது இணையத்தளத்திலும் எமது பணிகள் சார்ந்த விடயங்களைப் பார்க்க முடியும்.

எங்களுடன் மாற்றுத்திறனாளிகள் அங்கத்தவர் களாக இணைய வேண்டுமாயின் எமது நிலையத்தில் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து அங்கத்தவராக இணைந்து கொள்ளலாம்.

எமது நிறுவனத்தில் உற்பத்திப் பிரிவில் பணி யாற்றுபவர்களுக்கு மாதாந்த சம்பளம் வழங்குகின்றோம். விற்பனையில் இருப்பவர்களுக்கு விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. சுயதொழில் செய்பவர்களுக்கு தேவையறிந்து கடன்களை வழங்கியிருக்கின்றோம். மூலப்பொருட்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

தேவைமதிப்பீட்டுக் குழுவொன்றை நாங்கள் வைத்திருக்கிறோம். எங்களிடம் வரும் கோரிக்கைகளை தேவைமதிப்பீட்டுக் குழுக்களிடம் வழங்கி தொகைகள் மதிப்பிடபட்டு வழங்கப்படும். ஆனால் உதவிகோரும் அனைவருக்கும் உதவிகளை வழங்குவதில்லை. அவர்கள் அதனை எவ்வாறு செயற்படுத்துவார்கள் என்பதையறிந்து தேவைமதிப்பீட்டுக்குழு சிபார்சு செய்பவர்களுக்கு மட்டும் தான் நாம் உதவிகளை வழங்குவோம். இப்படியான முயற்சிகள் எமக்கு பெருமளவிற்கு வெற்றியளித்திருக் கிறன. நாங்கள் உதவி வழங்குகிற எல்லோரும் பெரும் பாலும் தங்களுடைய தொழில்களை செய்து கொண்டிருக் கிறார்கள்.

கருவி நிறுவனம் ஆரம்பித்ததிலிருந்து இன்று வரைக்கும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்பதை எடுத்துக் கொண்டால் குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் மத்தியில் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றோம். மாற்றுத்திற னாளிகளான நாங்களும் சமூகத்திற்கு வேலை செய்யக் கூடியவர்களாக இருக்கிறோம் என்ற சிந்தனையை விதைத்திருக்கிறோம். அதே எங்களுக்கு பெரியதொரு வெற்றி. இங்கே வரும் மாற்றுத்திறனாளிகளுக்கு நாம் கூறுவது “இங்கே வந்தால் ஏதும் வாங்கலாம் என்ற அடிப்படையில் வரவேண்டாம். எங்களால் சமூகத் திற்கு என்ன வழங்கலாம் என்ற சிந்தனையோடு வாருங் கள். அதற்கான வசதிகளை நாங்கள் செய்து தருவோம்”.

மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ செலவு கள் அதிகமாக காணப்படுகின்றன. மாற்றுத்திறனாளி களுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை யெல்லாம் வழங்கியிருக்கிறோம். அத்தோடு மாதாந்தம் இங்கு வருபவர்களுக்கு தொற்றுநோய் தொடர்பான சோதனைகளை செய்து வருகின்றோம். வருடாந்தம் மருத்துவ முகாமை எங்களுடைய அங்கத்தவர்களுக் காக நடத்துகின்றோம். அதிலும் எங்களுடைய அங்கத்த வர்கள் பயன்பெற்று செல்லக்கூடியதாக இருக்கின்றது. எங்களுடைய அங்கத்தவர்களின் மன நலனை மேம் பாடு செய்யக் கூடிய யோகாப்பயிற்சி போன்றவற்றை யும் நாங்கள் நடத்துகின்றோம். இது ஒரு சமூகம் சார்ந்த சிந்தனை. சமூகப்பணிகளோடு ஈடுபாடும் அக்கறை யும் கொண்டு உதிரிகளாக வாழ்ந்தவர்களை கூட்டி ணைத்து செய்யப்பட்ட ஒரு முயற்சிதான் இந்தக் கருவி.

ஆங்காங்கே இந்த சமூகத்திற்கு பணிசெய்ய வேண்டுமென்ற விருப்பத்தோடும் பொருத்தமான களங்கள் இல்லாமல் இருந்தவர்களையும் கூட்டிணைத்தது தான் இந்தக்கருவி. முதலில் எங்களுடைய கலந்துரையாடல் களில் 25பேர் கலந்து கொண்டார்கள். இன்று பல்லாயிரக் கணக்கானவர்களின் பங்களிப்போடு இந்த கருவி நிறு வனம் இயங்கி வருகிறது. இன்றைக்கும் நிதிசார்ந்த, அபிவிருத்தி சார்ந்த தேவைப்பாடுகள் இருக்கின்றன. வேறும் பல உற்பத்திப்பொருட்களை நாங்கள் செய்வதற்கு இருக்கிறோம். அது சம்பந்தமான நிதியீட்டமும் வளங் களும் சரியான முறையில் எங்களிடம் இல்லை. இப் பொழுது விவசாயமும் செய்கிறோம். நாங்கள் வேறு பல உற்பத்திகளை செய்வதற்கு 2.7மில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது.

சைன் சலவைத்திரவத்தை செய்வதற்கு நல்லூர் பிரதேசசெயலகத்தினுடைய விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவினால் பயிற்சி வழங்கப்பட்டது. அதனை தற்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பகீரதன் அவர்கள் வளவாளராக இருந்து அந்த பயிற்சியை வழங்கிய அடிப்படையில் தான் நாங்கள் இந்த உற்பத்தியை காத்திரமான அளவில் செய்து கொண்டிருக்கிறோம். இது முற்றுமுழுதாக எங் களுடைய நிறுவனத்தின் வணிகம் சார்ந்த ஒரு செயற் பாடு. அதனுடைய வடிவமைப்புக்கள் எல்லாமே வணிகம் சார்ந்த ஒரு கட்டுமானத்துடன்தான் இருக்கின்றன. இதி லிருந்து வருகின்ற வருமானம் எங்களுடைய அங்கத்த வர்களின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

தற்பொழுது வடமாகாணத்துக்குள்ளேதான் எங் களுடைய உற்பத்தி விநியோகங்களை செய்து கொண் டிருக்கிறோம். இதனை விருத்தி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்கு நிதி சம்பந்தமான தடங்கல்கள் உள்ளது. நாங்கள் அதனை நிவர்த்தி செய்து கொண்டால் அனைத்துப் பகுதிகளிலும் எங்களுடைய விற்பனையை விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பிருக்கும். ஒரு விடயம் என்ன வென்றால் எமது நிறுவனம் ஆரம்பித்த காலத்தோடு ஒப்பிடு கிற போது நிறுவனத்திற்கே வந்து சைனை வாங்கிக் கொண்டு போகிற வாடிக்கையாளரின் தொகை படிப் படியாக அதிகரித்துச் செல்கின்றமை எங்களுக்கு மனநிறை வைத் தருகின்ற ஒரு விடயம். பல்வேறு தடைகளையும் தாண்டி எடுத்த முயற்சி இன்றைக்கு மெல்ல மெல்ல வெற்றி யளிக்கின்ற இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது மனநிறைவான ஒரு விடயமாகும். நாங்கள் சில கடைகள் மூலமாகவும் அதனை விற்பனை செய்து வருகின்றோம். தற்போது நேரடியாக வாடிக்கையாளரிடம் விற்பனை செய்வதுதான் எங்களின் வணிக உத்தியாக இருக்கிறது. கடைகளிலும் இப்பொழுது கேட்டு வாங்கத் தொடங்கி விட்டார்கள்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான சூப்பர் மாக்கெட் போன்ற இடங்களில் விற்பனை செய்து காட்சிப்படுத்துகின்ற அளவிற்கு எங்களுடைய உற்பத்தி மேம்பட்டிருக்கின்றது. அதே நேரம் எங்களுடைய நிறு வனத்தின் பெயரைப் பயன்படுத்தி வேறு பொருட்களை யும் விற்பனை செய்கின்ற ஒரு துர்பாக்கியமான நிலை யும் இருக்கின்றது. ஆகவே அவற்றில் எங்களுடைய சமூகம் சார்ந்தவர்கள் விழிப்பாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எங்களுடைய இலக்கு வலுவிழப் புடன்கூடிய நபர்களினுடைய சமூகப்பங்கினை அதிகரித் தலாகும் எனக் கூறி முடித்தார்.

# இராஜதந்திரப் போர்?

-நிலாந்தன்-



தொகுப்பு: செல்வநாயகம் ரவிசாந்

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுக்கான பேரம் பேசும் சக்தி இல்லாமல் போய் விட்டது. போர் நிறைவுக்கு வந்த கடந்த எட்டு ஆண்டுகளில் எதுவுமே இடம்பெறவில்லை. ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் இராஜதந்திரப் போர் ஆரம்ப மாகி விட்டதாகப் பிரகடனம் செய்து விட்டார்கள். இராஜதந்திரப் போராட்டமெனும் போது முதலில் என் பலம், பலவீனம் அறிய வேண்டும். எதிர்த் தரப்பின் பலம், பலவீனம் அறிய வேண்டும். போதிய தகவல்களைத் தமக்குள் உள்வாங்கியிருக்க வேண்டும். அந்தத் தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் புலனாய்வுத் தகவல்களைப் பெறுவதற்கொரு கட்டமைப்புக் காணப்பட வேண்டும். இவற்றையெல்லாம் உள்ளடக்கிய சரியான கணிப் புப் பொறிமுறை காணப்பட வேண்டும். இவை எதுவுமில்லாமல் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதனை எவ்வாறு இராஜ தந்திரப் போராட்டமெனக் கூற முடியும்? உள்நாட்டு யுத்தம் இலங்கையில் நிறைவுக்கு வந்த பின்னர் இராஜதந்திரப் போர் ஆரம்பமாகி விட்டதாகத் தமிழ்த் தலைமை கூறுவது முற்று முழுதான பொய். இனியும் அந்தப் பொய்யைச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது என பிரபல அரசியல், சமூக ஆய் வாளர் ம. நிலாந்தன் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் ‘சிங்கள பௌத்தத் தலைமைகளின் இராஜதந்திரத்தை வெற்றி கொள்ளும் திறன் தமிழ்த்தலை மைகளுக்கு உண்டா?’ எனும் தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் கடந்த வைகாசி மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ் குப்பிளான் அறிவொளி சனசமூக நிலைய மண்டபத்தில் தமிழ்மக்களின் வாழ்வுரிமைக் கான செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் இன்பம் தலை மையில் இடம்பெற்ற போது கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,**

இலங்கையின் இராஜ்ஜியப் பாரம்பரியத்தை இரண்டு தடங்களில் நாங்கள் நோக்க வேண்டும். இலங்கை அரச தரப் பின் இராஜ்ஜியப் பாரம்பரியம், தமிழ்த் தரப்பின் இராஜ்ஜியப் பாரம்பரியம் என்பவையே அவையாகும். அரசு தரப்பின் இராஜ்ஜியப் பாரம்பரியம் என்பது ஒரு அரசுடைய தரப்பின் இராஜ்ஜியப் பாரம்பரியம். தமிழ்த் தரப்பின் இராஜ்ஜியப் பாரம்பரியம் எனப்படுவது ஒரு காலகட்டத்தில் அரசுடைய தரப்பாகவும் பின்னர் இடைப்பட்ட ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் ஒரு சிவில் நிர்வாகத்தை நிர்வகித்து நவீன காலத்தில் மீண்டும் அரசற்ற தரப்பாக மாறியுள்ள ஒரு தரப்பின் வரலாறு. அதிலும் அகண்ட தமிழ்ப் பரப்பு என வரும் போது பேரரசுகளை நிர்வகித்து பக்தி இலக்கியங்களைப் படைத்த ஒரு நீண்ட பாரம்பரியமுடைய ஒரு இனத்தின் இராஜ்ஜியத் தொடர்ச்சியாக அமைந்துள்ளது.

இலங்கை அரசு தரப்பின் இராஜதந்திரப் பாரம்பரியம் மிகவும் செழிப்பானது என மூத்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு தனது நூலொன்றில் குறிப்பிடுகிறார். அவருக் குமப்பால் மிகச் சிலர் தான் இலங்கையின் இராஜதந்திரப் பாரம்பரியம் தொடர்பில் எழுதியிருக்கிறார்கள். அரசுத் தரப்பு இராஜதந்திரத்துக்கு எல்லா வளங்களும் காணப்படும். ஏனைய நாடுகளுடன் அரசுக்கும் அரசுக்குமிடையிலான கட்ட மைக்கப்பட்ட உறவு நிலை காணப்படும். நீண்ட தொடரான இராஜதந்திரப் பாரம்பரியத்தை உடையவர்களாக இலங்கை அரச தரப்பின் இராஜதந்திரப் பாரம்பரியம் அமைந்துள்ளது.

இலங்கை அரசு தரப்பின் இராஜதந்திரப் பாரம்பரி யத்தை எடுத்து நோக்கினால் இலங்கை அரசு இந்து மகா சமுத் திரத்தில் இந்தியப் பேரரசுக்குக் கீழே அமைந்துள்ளது. உலகின் முக்கிய கடல்வழிப் போக்குவரத்துப் பாதையாகக் காணப்படு கின்ற சூழலுக்குள் இலங்கை அமைந்துள்ளது. “இலங்கைத் தீவு அழகானது, ரம்மியமானது. ஆனால், இலங்கை மக்கள் தங்களுக்கருகே காணப்படும் ஒரு பெரிய பனிப்பாறை என்றோ ஒரு நாள் உருகித் தங்களை மூழ்கடித்து விடும் என்ற அச்சத் துடனேயே காணப்படுகிறார்கள்” எனப் பிரபல அரசியலாள ரொருவர் கூறியுள்ளார். பனிப்பாறை என்று அவர் இந்தியப் பேரரசையே கருதினார். இந்தியப் பேரரசின் மீதான அச்சமும், அதனால் உண்டாகிய விழிப்பும் தான் இலங்கை அரச தரப்பின் இராஜ்ஜியப் பாரம்பரியத்தின் அடிச்சட்டமாக அமைந்து காணப்படுகிறது.

தலதா மாளிகைக்குள் சென்று புத்தரின் புனித சின்னங் களைக் கவர்ந்து சென்றதுடன் பௌத்தத்தைத் தோற்கடித்து வடக்கு, கிழக்கில் மறுபடியும் சைவத்தை ஸ்தாபித்ததும் இந்தியா தான். ஆனால், பௌத்தமே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒன்று தான். அண்மையில் இலங்கையின் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது முதலில் இந்தியாவே உதவிக்கு வந்தது. இவ்வாறான அனர்த்தங்களின் போது முதலில் உதவிக்கு முன்வருவதும் இந்தியா தான்.

ஜே. வி.பி கிளர்ச்சியின் போதும் அவர்கள் தான் உதவிக்கு வந்தனர். எனவே இந்தியாவின் செல்வாக்கு வலயத்திற்குள், பாதுகாப்பு வியூகத்திற்குள் தான் இலங்கை அமைந்துள்ளது.

இந்தியா தொடர்பான அச்சம் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையூடாக நோக்கும் போது ஒரு பிரதான விவகாரமாக அமைந்துள்ளது. நவீன காலங்களில் வேறு வேறு அச்சங்களும் உருவாகி விட்டன. ஆனால், இது இலங்கைக்கு மாத்திரமே உரித்தான அச்சமல்ல. பிராந்தியப் பேரசுகளுக்கு அருகிலேயோ, உலகப் பேரரசுகளுக்கு அருகிலேயோ அமைந் திருக்கும் சிறிய நாடுகள் எல்லாவற்றிற்கும் இவ்வாறான அச்சங்கள் இருந்து கொண்டே தானிருக்கின்றன. இந்து மகா சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளமையால் அது தொடர்பான அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக் கப்பட்டது தான் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை. இந்தி யப் பேரரசுக்கு அருகில் அமைந்துள்ள சிறிய நாடாகக் காணப்படுவதால் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையும், இராஜதந்திர நடவடிக்கையும் தற்காப்பு உணர்வுடன் எப்பொழுது மிருக்கும்.

யானையும், சிங்கமும் வாழும் காட்டில் நரி எவ்வாறு உயிர் வாழ்கிறது? தந்திரத்தால் தான் அது வாழ்கிறது. இலங்கைத் தீவின் இராஜதந்திரப் பாரம்பரியமும் அவ்வாறு தான். அவர்கள் வளையும் மட்டும் வளைந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள். வளைய மாட்டோம் முறிவோம் என அவர்கள் ஒருபோதும் சொல்லியதில்லை. கடந்த ஜனாதி பதித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ வீழ்வாரா இல்லையா என்ற அச்ச உணர்வு காணப்பட்ட அந்த இரவு வேளையில் தற்போதிருக்கும் அரச தலைவர் ஒரு தென்னந்தோப்பில் ஒழி ந்திருந்தார். இங்கு ஒரு இராணுவப் புரட்சி இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பு உலகம் முழுவதும் இருந்தது. அதற்குரிய எல்லா சாத்தியக்கூறுகளும் இலங்கையிலிருந்தன. ஆனால், அவ்வாறான எந்தவொரு சதிப் புரட்சியும் இடம்பெறாமலேயே ஆட்சி மாற்றம் சுமூகமாக நிகழ்ந்தது. இலங்கைத் தீவுக்குள்ள கவர்ச்சிகளில் அதுவுமொன்று எனக் குறிப்பிடுவார்கள்.

ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் மகிந்த ராஜபக்ஷ சகோதரர்கள் தாங்கள் வளையமாட்டோம் முறிவோம் என முடிவெடுத்திருந்தால் நிலைமை வேறு. ஆனால், அவர்கள் வளைவதெனவே முடிவெடுத்தார்கள். இதன் மூலம் தங்களை யும் காப்பாற்றிக் கொண்டார்கள். இலங்கை அரசின் மீது சுமத் தப்பட்ட போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து அரசையும் பாது காத்துக் கொண்டனர். இந்த நிலையில் தற்போது அடுத்த கட்டத் தேர்தல்களுக்கும் தயாராகி விட்டார்கள். வளையமாட்டோம் என வீராப்புக் காட்டுவார்கள். ஆனால், உரிய வேளையில் மிகவும் வளைந்து கொடுப்பார்கள். இது தான் இலங்கை இராஜ்ஜியப் பாரம்பரியத்தின் மரபாகவுள்ளது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச இந்தியப் படைகளை அனுப்பும் விவகாரத்தில் கூட அவ்வாறு தான் செயற்பட்டார்.

அதனை விட முக்கியமானவராக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன காணப்படுகின்றார். அவர் இறுதி வரை இந்தியாவிற்கு அடங்கிப் போவதில்லை என விடாப் பிடியாக நின்றார். ஆனால், இலங்கையில் தமிழர் பிரதேசங் களில் இந்தியாவால் உணவுப் பொதிகள் விமானத்திலிருந்து

**“இந்து மகா சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளமையால் அது தொடர்பான அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது தான் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை. இந்தியப் பேரரசுக்கு அருகில் அமைந்துள்ள சிறிய நாடாகக் காணப்படுவதால் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையும், இராஜதந்திர நடவடிக்கையும் தற்காப்பு உணர்வுடன் எப்பொழுதுமிருக்கும்”**

போடப்பட்ட பின்னர் அவர் அடங்கிப் போகும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இணைந்து கலந்து கொண்ட பத்திரிகையாளர் மாநாடொன்றின் போது இந்தியாவை மன்னிப்பேன். ஆனால், மறக்க மாட்டேன் என ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியிருந்தார். ஒரு விடயத்தை நாங்கள் மன்னித்து விட்டால் மறந்தும் விட்டோம் என்று தான் அர்த்தம். ஆனால், ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவ்வாறு கூறியுள்ளதன் அர்த்தமென்ன? தன்னை நோக்கி வீசப்பட்ட ஒரு வாளை பூமாலையாக அவர் ஏந்திக் கொண்டார். இதன் மூலம் தமிழர் களுக்கு உதவுவது போல வருகை தந்த இந்தியாவைத் தமிழர் களுடன் மோத விட்டார். இந்தியா தமிழர்களை ஒரு கருவி யாகக் கையாண்டு இந்தச் சிறு தீவினுள் நுழைய முற்பட்டது. அது வல்லரசுகளுக்கிடையேயான பனிப்போர்க் காலம். ஜெயவர்த்தனா அமெரிக்காவுக்குச் சார்பாகவிருந்தார். இந்தியா சோவியத் நாடுகளின் சார்பாகவிருந்தது. எனவே, ஜெயவர்த்தனவை வழிக்கு கொண்டு வருவதற்குத் தமிழ் மக்களுடைய அரசியலைக் கையாள வேண்டிய தேவை இந்தியாவிற்கிருந்தது.

எங்களுடைய இயக்கங்களை அழைத்து இந்தியா பயிற்சி வழங்கியது. வளங்களையும் வழங்கியது. இதன் மூலம் ஊக்குவித்து வளர்க்கப்பட்ட தமிழர்களுடைய ஆயுதப் போராட்டம் ஒரு கட்டத்தில் இலங்கை அரசாங்கத்தால் தானாக அடக்க முடியாததொரு வளர்ச்சியை அடைந்தது. மேற்குச் சார்பு நாடுகள் அனைத்திடமிருந்தும், குறிப்பாக தென்னாபிரிக்கா, இஸ்ரேல் உட்பட அனைத்து நாடு களிடமிருந்து உதவிகளைப் பெற்றும் அடக்க முடியவில்லை என்ற நிலை வந்த போது ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்கு தல் நடவடிக்கைக்கு அவர்கள் வியூகம் வகுத்தார்கள்.

ஒப்பரேஷன் லிபரேஷனில் வடமராட்சி வீழ்ச்சியுறும் கால கட்டத்தில் இந்தியா உணவுப் பொதிகளுடன் நாட்டிற்குள் பிரவேசித்தது.

அந்த உணவுப் பொதி போடும் காட்சி வரையும் ஒரு மேற்கின் விசுவாசியாக, இந்தியாவிற்கு வீரம் காட்டும் ஒரு தலைவராகக் காணப்பட்ட ஜெயவர்த்தனா அந்தக் கணத்தி லேயே தரையொட்ட வளைந்தார். ஆனால், அவர் முறிய வில்லை. வளைந்து கொடுத்து உணவுப் பொதிகளுடன் வந்த இந்தியாவை அரவணைத்தார். அரவணைத்து அடுத்த கட்டமாக இந்தியாவையும், புலிகள் இயக்கத்தையும் மோதவிட்டார்.

சிங்கள இராஜ்ஜியப் பாரம்பரியத்தை விளங்கிக் கொள்வதற்கு ஜெயவர்த்தனா ஒரு சிறந்த வகை மாதிரி. அவர், தான் மேற்கின் நண்பன், மேற்கின் உதவி பெற்றேன் என் றெல்லாம் சிந்திக்கவில்லை. நானொரு மேற்கத்தைய பாரம் பரியத்தில் வந்தவன், மேற்கினால் வளர்க்கப்பட்டவன் என் றெல்லாம் அவர் சிந்திக்கவில்லை. தான் ஒரு முதலாளித்துவக் கட்டமைப்பிலிருந்து உருவானவன் எனவும் சிந்திக்கவில்லை. நாங்கள் ஒரு அரசு. இன்னொரு அரசிற்கு வளைய மாட்டோம் என வீரம் காட்டவுமில்லை. அனைத்து வீரப் பிரகடனங் களையும் உணவுப் பொதிகளுடன் கைவிட்டார். அவ்வாறு கைவிட்டுவிட்டு முழுமையாக இந்தியாவிடம் சரணடைந்தார்.

அடுத்த கட்டமாக இந்தியாவையும், தமிழ்மக்களையும் எவ்வாறு மோதவிடலாம் என்பதை அவர் மிகவும் வெற்றி கரமாக முன்நகர்த்தினார். ஜெயவர்த்தனா விட்டுச் சென்ற முதுசத்தைத் தான் இன்று வரை சிங்கள மக்கள் அனுபவித்து வருகின்றனர். எதிர்மறையாகத் தமிழ்மக்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதும் அதுதான். தமிழ்மக்களை அவர் முழு அள விலான இந்திய விரோத நிலைக்குக் கொண்டு வந்து விட்டார். மிகத் தந்திரமாகக் காய்களை நகர்த்தினார்.

எந்த இந்தியாவிற்கு முன்னால் வீரம் காட்டிக் கொண்டு நின்றாரோ அந்த இந்தியாவின் கால்களில் விழுந்தார். சிங்களத் தலைவர்கள் தாங்கள் எப்போதும் முறியமாட்டோம் என வீரம் காட்டுவார்கள். ஆனால், உரிய நேரத்தில் வளைந்து சரணடைவதன் மூலம் தங்கள் காரியத்தைச் செயற்படுத் துவார்கள். அவர்கள் காரியத்தை அடுத்த கட்டம் நகர்த்தும் நோக்கிலேயே அவ்வாறு வளைந்து கொள்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திரப் பாரம்பரியம் எனப்படுவது அப்படியாகத்தான் இருந்து வந்துள்ளது. அவர்கள் எப்போதுமே வளைந்து கொடுத்துச் சுதாகரித்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

**“சீனாவையும் வைத்துக்கொண்டு இந்தியாவையும் அமெரிக்காவையும் கையாள்வதன் மூலம் தங்கள் பேரத்தை இலங்கை ஆட்சியாளர்கள் தக்க வைப்பதற்கு முயற்சிக்கிறார்கள்”**

ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் பிராந்தியத்தில் ஒரு துருவ இழுவிசையும், வெளியில் இரண்டு இழுவிசைகளும் காணப்பட்டன. இந்த நிலையில் பிராந்திய இழுவிசை என்பது வெளியிலிருந்த இழுவிசையின் பிரதிபலிப்புத் தான்.

ஈழத்தமிழர்கள் நடாத்திய யுத்தம் என்பது பனிப் போரின் ஒரு அங்கம் தான். நாங்கள் நடத்தியது அமெரிக்காவினு டையதும், சோவியத் யூனியனினதும் யுத்தத்தைத் தான். அது சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையிலான மோதலாகத் தோன்றினாலும் அவ்வாறில்லை. சோவியத் குடியரசுக்கும், அமெரிக்கக் குடியரசுக்குமிடையிலான யுத்தத் தையே நாங்கள் நடத்தினோம். ஜெயவர்த்தனவின் மருமகனின் தற்போதைய காலகட்டத்தில் மூன்று துருவ இழுவிசை களுக்குள் இலங்கை சிக்கியிருக்கிறது. சீனா என்ற பிராந்தியப் பேரரசு உலகின் ஆகப் பெரிய பொருளாதாரமாக எழுச்சி பெற்று விட்டது. உலகம் முழுவதும் தன் நிதியுதவிகள் மூலம் தன் பிரசன்னத்தைப் பேணிக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா அனைத்து இடங்களுக்கும் படைகளை அனுப்பியது. சீனா அனைத்து இடங்களுக்கும் முதலாளிகளை அனுப்பியது. அமெரிக்கா படைத்தளங்களைப் பேணித் தன்னுடைய பிர சன்னங்களை உறுதி செய்து கொண்டது. சீனா முதலீட்டின் மூலமும், வரையறையின்றி உதவுவதன் மூலமும் நக்குண்டார் நாவிழந்தார் எனும் நிலைமைக்குச் சிறிய நாடுகளைத் தள்ளு வதன் மூலம் சிறிய நாடுகளைத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தது. சிறிய நாடுகளின் யுத்தங்களில் அந்த நாடுகளின் அரசு களை ஆதரிப்பதன் மூலமும் அல்லது அந்த நாடுகளுக்கு வேண்டிய உட்கட்டுமானங்களைக் கட்டியெழுப்பும் போது நிதி ரீதியாகவும், வள ரீதியாகவும் உதவுவதன் மூலமும், துறை முகங்களை விருத்தி செய்வதன் மூலமும், துறைமுகங்களுக்கு அருகில் விமான நிலையங்களை விருத்தி செய்வதன் மூலமும் சீனா நிதி ரீதியாக உலகத்தைத் தனது வலைப்பின்னலுக்குள் கொண்டு வந்து விட்டது.

ஆரம்பகாலகட்டத்தில் ஏசியா பசுபிக் என்று தான் ஒரு பிராந்தியம் அழைக்கப்பட்டது. ஆனால், தற்போது அது இந்தோ பசுபிக் என்று அழைக்கப்படுகிறது. இந்த வார்த்தை அவுஸ்ரேலியரொருவரால் உருவாக்கப்பட்டது. ஆனால், இதனை அமெரிக்கா தனக்கு வசதியாகப் பயன்படுத்த ஆரம் பித்து விட்டது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஜப்பான், பசுபிக் கடல், அவுஸ்ரேலியா உட்படச் சீனாவையும் இணைக்கும் வகை யிலானதொரு பாதுகாப்பு வலயம் முன்பு இருந்தது. இந்த நிலையில் இந்தோ பசுபிக் என்று சொல்லும் போது இந்தியாவும் அதற்குள் உள்வாங்கப்பட்டு விட்டது. இதனால், வலுச் சமநிலை மாறும். ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்குள் சீனாவும், அமெரிக் காவும் இருந்தன. இந்தோ பசுபிக் எனும் போது இந்தியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், அவுஸ்ரேலியா என்பன வரு கின்றன. பூகோளப் பங்காளிகளாக இந்தியாவும், அமெரிக்கா வும் இணையும் போது இந்த வலுச் சமநிலைகள் அமெரிக்கா விற்குச் சார்பானதாக மாறும். தற்போது இந்தப் பிராந்தியத்தை இந்தோ பசுபிக் என்ற கட்டமைப்பிற்குள் கொண்டுவருவதற்கு அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது. இதற்கான மாநாடு கடந்த

ஆண்டு சிங்கப்பூரில் இடம்பெற்ற போது அந்த மாநாட்டில் பங்கு பற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதற்குப் பெருமளவிற்குச் சாதகமாகப் பதிலளிக்கவில்லை. இந்தோ பசுபிக் மூலோ பாயத்தின் படி உலகின் மிக நீண்ட கடற் பாதுகாப்பு வலயமாக அது அமையும்.

அமெரிக்காவின் கடற்படைத்தளங்களில் அறுபது வீதமானவை இந்த ஆண்டுக்குள் அந்தப் பிராந்தியத்திற் குள் வந்து விடும். ஒரு புறம் தென் சீனக் கடலை உரிமை கோரும் சீனா அங்கே செயற்கைத் தீவுகளை உருவாக்கி அந்தச் செயற்கைத் தீவுகளைப் படைத்தளங்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றது. இன்னொரு புறம் அமெரிக்கா இந்தோ பசுபிக் வலயத்தை உருவாக்குவதாகக் கூறிக் கொண்டு இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஒரு துருவ இழுவிசையைத் தீவிரமாக்குகிறது. இந்த முத்துருவ இழுவிசைகளிற்குள் தற்போது இலங்கைத் தீவு சிக்கியிருக் கிறது. இதனை எவ்வாறு கையாள்வது என்பது சிங்கள ஆட்சியாளர்களுக்கொரு சவால். இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. ஒரு புறம் சிங்களத் தலைவர்கள் நிம்மதியாக உறங்கமாட்டார்கள் எனும் நிலை காணப்பட மறுபுறம் அவர்கள் இன்னும் கூர்மையாகச் சிந்திக் கிறார்கள்.

சீனாவுக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகம், கோப் சிற்றி ஆகியவற்றை ஏற்கனவே கொடுத்துள்ள நிலையில் சீனா தென்சீனக் கடலில் மட்டும் செயற்கைத் தீவுகளை உருவாக்க வில்லை. கொழும்பில் துறைமுகத்தைப் பெரிதாக்கிக் கடலை மூடி ஒரு மாதிரி நகரை உருவாக்கி இலங்கையின் நிலப்பரப்பையே சீனா செயற்கையாக அதிகரித்துள்ளது. அதனை இப்போது நிதி நகர் என்கிறார்கள். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனா அபிவிருத்தி செய்து வருவதுடன் அதி லிருந்து மத்தள விமான நிலையத்தை இருபது நிமிடங் களிற்குள் அடையக் கூடிய வகையில் வீதிகளையும் உரு வாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சீனா அதனுடைய முத்து மாலைத் திட்டத்தின் படி பாகிஸ்தான் உட்பட இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் அமைத்திருக்கும் அனைத்துத் துறை முகங்களிற்கும் இவ்வாறான துறைமுக மற்றும் விமானத்தள வசதிகளுண்டு. இவை வெளித் தோற்றத்திற்கு நிதி முதலீடு களாகத் தோன்றலாம். உட்கட்டுமான அபிவிருத்திகளாகத் தோன்றலாம். ஆனால், யுத்த நடவடிக்கைகளின் போது திடீரென இராணுவத் தேவைகளுக்கென அவற்றை மாற்றக் கூடிய நெருக்கமான இடங்களில் அவை அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கம் வேறு விதமாகச் சிந்திக்கிறது.

சீனாவை முழுமையாக அகற்ற முடியாத அளவுக்கு ஒரு பொருளாதாரக் கட்டமைப்பு வலையின் கீழ் உலகம் முழுவதும் தற்போது காணப்படுகிறது. இது ஒரு பொருளாதார யதார்த்தம். சீனாவையும் வைத்துக் கொண்டு இந்தியாவையும், அமெரிக்காவையும் கையாள்வதன் மூலம் தங்கள் பேரத்தை இலங்கையின் ஆட்சியாளர்கள் தக்க வைப்பதற்கு முயற்சிக் கிறார்கள். இந்தச் சிறிய தீவு மூன்று வல்லரசுகளும் சண்டை யிட்டுப் பெற்றுக் கொள்ளும் ஒரு அப்பமாக மாறிவிடக் கூடாது என அவர்கள் சிந்திக்கிறார்கள். அவர்கள் முன்னாள் ஜனாதி பதிகளான ஜெயவர்த்தனாவிடமிருந்தும், மகிந்த ராஜபக்ஷ விடமிருந்தும் பாடங்களைக் கற்றிருக்கிறார்கள். சீனாவை அமைதிப்படுத்த வேண்டிய தேவை இலங்கைக்கிருக்கிறது. சீனாவைக் கோபத்துக்குள்ளாக்கினால் அது மீண்டும் மகிந்த ராஜபக்சவை உருவேற்றும்.

அனைத்து வல்லரசுகளின் சமநிலையையும் பேணு வது அவசியம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அர சாங்கம் சீனா, இந்தியா, அமெரிக்கா என்ற மூன்று துருவ இழுவிசைகளுக்குமிடையில் ஒரு சமநிலையைப் பேண எத் தனிக்கிறது. யார் பக்கமும் முழுமையாகச் சாயாமல் அவர்கள் முடிவெடுக்க முயற்சிக்கிறார்கள்.

இந்தியா பலாலி விமானத்தை அபிவிருத்தி செய் வதற்கு இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருந்தது. பலாலிக்கு அருகில் மயிலிட்டித் துறைமுகம் அமைந்துள்ளது. மன்னா ருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையில் ஒரு கடற்பாதை கேட்டது. திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களைக் கேட்டது. எல்லாவற்றிற்கும் தருவோம் தருவோம் என்று கூறிக் கொண்டே அவர்கள் காலம் கடத்துகிறார்கள். சில வற்றை வழங்குவதற்கு முன்வந்த போதும் சிலவற்றை வழங்கு வதற்குப் பின்னிற்கிறார்கள். நூறு எண்ணெய்க்குதங்களில் ஐம்பது எண்ணெய்க்குதங்களைத் தருவோம் என்று குறிப்பிடு கிறார்கள். அவ்வாறு ஐம்பது எண்ணெய்க்குதங்கள் வழங் கப்பட்டால் துறைமுகமும் அவர்களிடம் தான் போய்ச் சேரும். யாரிடம் எண்ணெய்க்குதங்கள் வழங்கப்படுகிறதோ அவர்களுக்குத் தான் துறைமுகமும் வழங்கப்பட வேண்டும்.

நவீன இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர மரபில் ஜெயவர்த்தனவின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க ஜெயவர்த்தன எதிர்நோக்கியதை விடவும் புதிய துருவ இழு விசைகளைச் சந்தித்து வருகிறார். அவர் ஜெயவர்த்தனா, மகிந்த ராஜபக்ஷ ஆகிய இரு தலைவர்களிடமும் கற்றுக் கொண்ட அனுபங்களின் அடிப்படையில் முப்பெரும் இழு விசைகளையும் சமாளித்துக் கொண்டு போகும் ஒரு இராஜ்ஜியக் கொள்கையை முன்னெடுத்துள்ளார். இலங்கைத் தீவின் அரச இராஜதந்திரப் பாரம்பரியம் எனப்படுவது செழிப் பானது. அதனைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். அது எல்லா வளங்களையுமுடைய ஒரு அரசுடைய தரப்பின் இராஜ–தந்திரம் இது தொடர்பில் சிந்திப்பதற்கும், தகவல்கள் சேகரிப் பதற்கும் பல செயற்பாட்டாளர்கள் காணப்படுவார்கள். அரசு டைய தரப்பின் இராஜதந்திரப் பாரம்பரியம் வளையும் வரை வளையும். ஒரு நாளும் முறியாது. தன் காரியமாகும் வரை வளையக் கூடிய சிங்கள இராஜதந்திரப் பாரம்பரியம் ஒரு போதும் முழுவளவிலான வீரத்தைக் காட்டாது.

அரசுடைய தரப்பின் இராஜதந்திரப் பாரம்பரியம் இறந்தகாலத்திலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டமையை பின்னணியில் வைத்து நோக்கும் போது அடுத்து வரும் ஜனாதி பதித் தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து கோத்தபாய ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அவர் ஊடகங்களுக்கு வழங்கி வரும் பேட்டிகள் ஒவ்வொன்றிலும் இந்தியாவிற்கு ஒரு செய்தியைச் சொல்லு கிறார். தங்களை விடவும் தற்போதைய அரசாங்கம் தான் சீனாவிற்குக் கூடுதலான வகையில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்துள்ளது எனக் குறிப்பிடுகிறார். தாங்கள் ஆட்சியிலி ருந்த காலகட்டத்தில் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள

பாதிப்புக்களை விடவும் தற்போது தான் அதிகளவிலான பாதிப்புக்கள் ஏற்படுவதாகக் குறிப்பிடுகிறார். "நாங்கள் தான் உங்களுக்குக் கூடுதலான நன்மைகள் செய்துள்ளோம். நீங்கள் தவறாக நினைத்து எமது ஆட்சியைக் கவிழ்த்து விட்டீர்கள்" என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார். நான் அறியக் கூடிய வகையில் அவர் இது தொடர்பாக மூன்று பேட்டிகள் வழங்கியுள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகிய போது அவரைப் போன்ற அரசியல் சாரா தொழிலதிபர்கள் அரசியலுக்குள் வர வேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தார். அவரும் ஒரு அரசியல் சாரா தொழில்வாதி. டொனால்ட் ட்ரம்ப்பைப் போலவே சிறுபான்மை மக்களைப் பாதிக்கக் கூடிய வகையில் முடிவுகளை எடுக்கும் ஒரு அரசியலை மனதில் வைத்து அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். எதுவானாலும் மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்திலிருந்து ஒருவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராக முடியும். ராஜபக்ஷ குடும்பத்தில் போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்படாத நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் காணப்படுகின்றனர். நாமல் போன்றவர்களை அனைத்துலக ரீதியாகப் போர்க் குற்றச்சாட்டிற்குள் கொண்டு வர முடியாது. ராஜ்பக்ஷ குடும்பம் சிங்கள மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த வெற்றி சாதாரண வெற்றியல்ல. பல ஆண்டுகளுக்கு நினைவு கூரப்படும் ஒரு வெற்றியாக இந்த வெற்றி அமைந்துள்ளது. எனவே, அந்த வெற்றியின் வாரிசாக, போர்க் குற்றச்சாட்டிற்குள் வராத இளைய ராஜபக்ஷக்கள் அடுத்து வரும் தேர்தல்களில் களமிறங்க முடியும்.

இறந்த காலத்திலிருந்து ராஜபக்ஷக்கள் பாடம் கற்றுக் கொள்ளாவிட்டாலும் இலங்கைத் தீவின் ராஜ்ஜியக் கட்டமைப்பு அவர்களுக்கு வழி காட்டும். இதன்படி அவர்கள் தாம் முன்னைய காலங்களில் விட்ட தவறுகளை இனிமேல் விடுவதில்லை என முடிவெடுத்தால் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் நிலைமை மேலும் பயங்கரமாக மாறும். கடந்த காலங்களில் தாம் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் சிங்களத் தலைவர்களும், கொள்கை வகுப்பாளர்களும் முடிவுகளை மாற்றுகிறார்கள். இந்த விடயத்தில் அவர்கள் மாறிகள். மாறிலிகளல்ல. ஆனால், தமிழ்மக்களின் உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் அவர்கள் எப்போதும் மாறிலிகளாகவேயுள்ளனர். இந்த விடயத்தில் அவர்கள் இறந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்றதாகத் தெரியவில்லை. தமிழ்மக்களின் உரிமைகளை மறுக்கும் விடயத்தில் அனைத்து ஆட்சியாளர்களுமே மாறிலிகள் தான். ஆனால், இராஜதந்திர முடிவுகளைப் பொறுத்தவரை அவர்கள் மாறிகள். நிலைமைக் கேற்ப சுதாகரிக்கிறார்கள். சரணடைகிறார்கள். விட்டுக் கொடுக்கிறார்கள். வளைந்து கொடுக்கிறார்கள். இவை இலங்கை அரசு தரப்பின் இராஜதந்திரப் பாரம்பரியம்.

இலங்கையில் தமிழ்ப்பரப்பின் இராஜதந்திரப் பாரம்பரியம் எனப்படுவது பல நூற்றாண்டு கால வரலாறு. தமிழ்மக்களின் இராஜதந்திரப் பாரம்பரியம் தொடர்பாக வெளிவந்த எழுத்து ஆவணங்கள் மிகவும் குறைவு. தமிழில் பேரரசுகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இந்தப் பேரரசுகள் பிரமாண்டமான ஆலயக் கோபுரங்களை அமைத்துள்ளன. ஆனால், இந்தப் பேரரசுகள் ஏனைய அரசுகளுடன் பேணிய உறவுகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கான ஆவணங்கள் போதுமானதாகவில்லை. தமிழின் எழுச்சிக் காலம் பக்தி இலக்கியக் காலமாக அமைந்துள்ளது. இது தொடர்பான எழுத்து ஆவணங்கள் காணப்படுகின்றன. ஆனால், எமது இராஜதந்திர மரபைக் காட்டும் விதத்தில் எங்களிடம் ஆவணங்களில்லை. எப்போதுமே ஆவணப்படுத்தல், தொகுத்தல் போன்ற விடயங்களை அந்தத்தக் காலகட்டத்தில் மத நிறுவனம் அல்லது அரசு நிறுவனம் மேற்கொள்ள வேண்டும். நிறுவனமயப் படுத்தலூடாகவே ஆவணப்படுத்துவது இலகுவானதாக அமையும். ஆனால், தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்குப் பின்னரான தற்போதைய காலகட்டத்தில் தனியார்களும், செயற்பாட்டாளர்களும் இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் நிலைமை மாறிவிட்டது.

இந்திய இராஜதந்திரப் பாரம்பரியத்தில் கேரளர்கள் செலுத்தியது போன்ற செல்வாக்கைத் தமிழ்மக்கள் செலுத்தவில்லை. தமிழக மக்கள் இந்திய மத்திய அரசைத் தங்களுடையதாகக் கருதாமையே இதற்கான காரணமெனச் சொல்லப்படுகிறது. இதனால், தமிழ்மக்களால் இராஜதந்திரத் துறையில் அதிகளவு பிரகாசிக்க முடியவில்லை. சிறியளவானோரே இந்தத் துறைக்குள் பிரகாசித்திருக்கின்றனர். தமிழர் தரப்பில் இந்தத் துறையில் கற்றுத் தேர்ந்தவர்களின் தொகை மிகவும் குறைவாகவுள்ளது என்பதே யதார்த்தம். இன்றைய காலகட்டத்தில் இராஜதந்திரத் துறையை விரும்பிக் கற்பவர்களின் தொகை மிகவும் குறைவாகவுள்ளது. எங்களுடைய பெற்றோர்களும் இதற்கான ஊக்குவிப்புக்களை வழங்கவில்லை. இதுவொரு சங்கடமான நிலைமை. எங்களுடைய புலம்பெயர்ந்த பரப்பில் கூட இது தொடர்பாக எங்களுடைய பிள்ளைகள் ஊக்குவிக்கப்படவில்லை. ஆகவே, நவீன காலகட்டத்தில் கூட தமிழகத்திலும், ஈழத்திலும் எங்களுடைய இராஜதந்திரப் பாரம்பரியம் செழிப்பானதாக அமையவில்லை.

ஈழத்தின் ஆயுதப் போராட்ட காலத்தை எடுத்து நோக்கினால் தனித்தனி ஆளுமைகள் துலங்கியவளவிற்கு இராஜ்ஜியவியல் என்பது நிறுவனமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கடந்த–38 ஆண்டு காலமாகப் போராடிய எமது மக்கள் போதியளவு அறிவாராய்ச்சி மையங்களை உருவாக்கத் தவறி விட்டனர். குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிந்தனைக் குழாத்தினரும் எம்மத்தியில் காணப்படவில்லை. ஒரு செழிப்பான இராஜ்ஜிய மரபை உருவாக்குவதற்கு சிந்தனைக் குழாத்தினர் காணப்பட வேண்டும். சிந்தனைக் குழாத்தினர் காணப்பட்டால் அறிவாராய்ச்சி மையங்களும் காணப்பட வேண்டும். அரசியல் அதிகமாக அறிவுபூர்வமாக உள்வாங்கப்பட வேண்டும். அவ்வாறெனில் தான் ஒரு இராஜதந்திர மரபை உருவாக்க முடியும். இராஜதந்திரவியல் என்பது ஒரு பரந்து அகன்ற துறை. அந்தத் துறைக்குள் பல்வேறு ஒழுக்கங்கள் வந்து கலக்கும். தற்போது இராஜதந்திரவியல், வெளிநாட்டுக் கொள்கை போன்ற துறைகள் மேற்கத்தையப் பல்கலைக் கழகங்களில் பீடங்களாகி விட்டன. எங்களுடைய பல்கலைக் கழகங்களில் இந்தத் துறைகள் இன்னமும் ஆரம்பமாகவே இல்லை.

தமிழ் இராஜதந்திரப் பாரம்பரியம் பலவீனமாக இருப்பதற்கு அரசியல்வாதிகளும், இயக்கங்களும் மாத்திரம் பொறுப்பல்ல. எங்களுடைய அறிவியல் குழாமும் பொறுப்பு.

எங்களுடைய ஊடகவியலாளர்கள் பொறுப்பு. இயக்கங்கள் மீது அதிக விமர்சனங்களை முன்வைத்த தமிழ் மிதவாதிகளே ஒரு சிந்தனைக் குழாத்தினரை உருவாக்கவில்லை, அவர்களிடம் ஆராய்ச்சி மையங்களும் காணப்படவில்லை. இராஜதந்திர மரபு தொடர்பில் அவர்கள் அறவே சிந்திக்கவில்லை. தற்போதும் பூகோள அரசியல் தொடர்பில் கதைத்தால் அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரின் அகராதியில் மாத்திரம் தான் காணப்படுகிறது எனச் சிலர் நம்புகிறார்கள். அவ்வாறு நம்பியே சில பத்திரிகைகள் ஆசிரியர் தலையங்கம் எழுதுகிறது. பூகோள அரசியல் என்ற வார்த்தைப் பிரயோகத்தைப் பகிடியாக நினைக்கும் ஒரு கூட்டம் எம்மத்தியில் காணப்படுகின்றது. பூகோள அரசியல் என்பது பகிடியல்ல. அதுவொரு உயிர் நிலை வார்த்தை. ஈழத்தமிழர்களின் பேரமாகவும், பலமாகவும் எங்களுடைய புவிசார் அமைவிடமே விளங்குகிறது. இந்தப் பேரத்தின் ஊடாகவே ஈழத்தமிழர்கள் தங்களுடைய கனவுகளை அடைய முடியும். இவ்வாறிருக்கையில் பூகோள அரசியலை நாங்கள் ஒரு கட்சித் தலைவருக்கு மாத்திரமே உரியதாகப் பார்க்கிறோம். இவ்வாறிருக்கையில் எமது ஊடகங்கள் மற்றும் அறிவியல் சூழல்கள் எவ்வாறு ஒரு செழிப்பான இராஜ்ஜியப் பாரம்பரியத்தை உருவாக்கும்?

மிகவும் அறிவு பூர்வமானதொரு விடயத்தை, பல்துறை சார் ஒழுக்கத்தை நாங்கள் விளையாட்டாகப் பிரகடனம் செய்து விட்டு கடந்த காலங்களை வீணாகக் கழித்து விட்டோம். தமிழ் இராஜதந்திரம் எனப்படுவது மிகவும் பலவீனமானதொரு பாரம்பரியத்தையே கொண்டுள்ளது. ஈழத்தமிழ் மக்கள் அதிகம் கற்றுத்தேற வேண்டியதொரு துறையாக இராஜதந்திரவியல் காணப்படுகிறது. எனவே, இது தொடர்பாக ஆழமாகச் சிந்திப்பதற்கும், அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் சிந்திப்பதற்கும் தமிழ்மக்கள் தயாராக வேண்டும். சிங்களவர்கள் பெரும்பான்மை இனம். நாங்கள் சிறுபான்மை இனம். அவர்கள் அரசுடைய தரப்பு. நாங்கள் அரசற்ற தரப்பு. அவர்கள் வென்ற தரப்பு. நாங்கள் தோற்ற தரப்பு. அவர்களுடைய தலைவர்கள் அவர்களுக்காக எதையும் செய்யத் தயாராகவிருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய தலைமைகள் எங்களுக்காக எதனையும் செய்யத் தயாராகவில்லை. இவ்வாறான பல்வேறு பின்னணிகளுக்கு மத்தியில் பல நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்ற அனைத்துலகப் பலம், வளம் என்பவற்றுடன் செழித்து வளர்ந்து காணப்படும் சிங்களப் பாரம்பரியத்துக் கெதிராக நாங்கள் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் இருந்து கொண்டிருக்கிறோம்.

எங்களுக்குப் பலமாக புலம்பெயர்ந்த மக்களும், பலமான தமிழகமும் காணப்படுகிறது. தமிழகத்தில் இராஜதந்திரத் துறையில் கற்றுத் தேர்ந்த பல ஞானிகள் காணப்படுகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டுக் களைத்தோ, சலித்தோ பழுத்த அனுபவத்துடன் பலர் புலம்பெயர் தேசங்களில் வசிக்கிறார்கள். அவர்களின் அறிவைத் தமிழ்மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த எம்மவர்கள் முன்வர வேண்டும். தற்போதைய அரசியல் சூழலில் தமிழ்மக்களின் அரசியல் பேரம் எனப்படுவது இரண்டு வழிமுறைகளில் காணப்படுகின்றது. ஜனநாயக வழிமுறையான தேர்தல் மூலம் மக்கள் ஆணையைப் பெற்ற தலைவர்கள், இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் கீழ் இருப்பதான புவிசார் அமைவிடம் என்பனவே தற்போது தமிழ்மக்களின் பிரதான பலமாக அமைந்துள்ளன. அந்தப் பலமுணர்ந்து தமிழ் மக்களின் அரசியலை முன்னெடுப்பதாயின் அது முழுமையாக அறிவுபூர்வமானதாக அமையவேண்டும். வெறும் தேர்தல் வேட்கை கொண்ட வாக்கு வேட்டை அரசியலுக்கூடாகத் தமிழர்களின் அரசியலை நகர்த்துவதால் பயனேதுமில்லை.

ஆகவே, தமிழ் மக்கள் தங்கள் பலம் எது? பலவீனம் எது? என அறிந்து அந்த அடிப்படையில் தங்களைப் பலப்படுத்த வேண்டிய காலகட்டத்திலிருக்கிறார்கள். அனைத்துலக மட்டத்தில் முத்துருவ இழுவிசைகளுக்கிடையில் போட்டி அதிகரித்து வரும் நிலையில் இலங்கையின் கேந்திரமுக்கியத்துவம் சர்வதேச அளவில் மீண்டும் உயர்வடைந்து வருகிறது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் அதிகரித்துவரும் நிலையில் தமிழ் மக்களுக்கான முக்கியத்துவமும் அதிகரித்து வருகிறது. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் எடுக்கும் முடிவுகள் தான் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தைத் தீர்மானிக்கும். எனவே, போருக்குப் பின்னரான தற்போதைய காலகட்டத்திலும் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தை வைத்து நோக்கினால் தமிழ்மக்கள் மிகுந்த பலமுடைய தரப்புத் தான். ஆனால், அந்தப் பலத்தை உணர்ந்து பயன்படுத்தும் நிலையில் எங்கள் தலைவர்கள் உண்டா? எனவும் அவர் ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

**"சிங்களவர்கள் பெரும்பான்மை இனம். நாங்கள் சிறுபான்மை இனம்.அவர்கள் அரசுடைய தரப்பு. நாங்கள் அரசற்ற தரப்பு. அவர்கள் வென்ற தரப்பு. நாங்கள் தோற்ற தரப்பு. அவர்களுடைய தலைவர்கள் அவர்களுக்காக எதையும் செய்யத் தயாராகவிருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய தலைமைகள் எங்களுக்காக எதனையும் செய்யத் தயாராகவில்லை"**

**"நிலைமைக்கு ஏற்ப சுதாகரிக்கின்றார்கள், விட்டுக்கொடுக்கின்றார்கள், வளைந்து கொடுக்கின்றார்கள் இவை இலங்கை அரசின் இராஜதந்திரப் பாரம்பரியம்"**

# அப்புக்காத்தரும் அன்னம்மாக்காவும்...

"அப்பனே ஆண்டவா.. எல்லாரும் நல்லா இருக்க வேணும்.." கும்பிட்டுக் கொண்டு திரும்பிறன்.. சொல்லி வைச்ச போல அன்னம்மாக்கா எதிரில வாறா.. நல்ல தாய் போச்சு..

"நாசமாய் போச்சு.. உவன் அலம்பல் அப்புக் காத்தரிட்ட மாட்டப்போறன் போல.. எல்லாத்துக்கும் உடனே ஓமெண்டு சொல்லி வைப்பம்... எப்படி சுகங்கள்..? ஏதோ அவசரமாய் போறது போல கிடக்கு..

அமைச்சரைச் சந்தித்து ஒரு மனு கொடுக்கப் போறன்"

என்ன பிரச்சினை..? என்னத்துக்கு....? யாருக்கு..?

எங்கட வீட்டுக்குக் கத்தரித்தோட்டம் வர வர நாசமாகிக் கொண்டு போகுது.. அதைக் காப்பாற் றச் சொல்லித்தான்.. பல முறை பல அதிகாரி களிடம் அறிவிச்சும், எல்லாரும் அசமந்தப் போக்கில இருக்கினம்.. இந்த முறை எழுத்தில மனுக் கொண்டுபோய் அமைச்சரிட்ட கொடுக்கப் போறன்..

என்னது..?

இதுக்கும் தீர்வில்லை எண்டாப் பிறகு... பெரிய பிரச்சினை வரும்.. தெரியும் தானே..

அது சரி.. யாற்ற தோட்டம்?..

எங்கட தான்....

சரியாப் போச்சு... என்ன நடந்தது...?

திணைக்களத்தால தான் கத்தரி நாற்றுக் கள் தந்தவை... நட்டனான்.... இப்ப அது வடிவாய் வளருதில்லை.. எங்களுக்கு மட்டும் ஏதோ செய்து போட்டாங்கள்...

அதாலை....?

அதாலை தான்.. முறையிடப் போறன்...

என்னெண்டு...?

வளரேல்ல எண்டு...

நீ ஒழுங்காய் தண்ணீர் ஊத்தினனியோ..?

இடைக்கிடை ஊத்திறனான்..

## நிமிர்வு வேண்டி நிதம்

நிமிர்வு வேண்டி நிதம்
நித்தம் கூச்சல் போடுகிறோம்....
தெரு வெளியில் வந்து..

உரிமைகளுக்காய், உயர்வுகளுக்காய்...
யார் யாரோ பறித்ததற்காய்....

பதிந்த கூரைகளின் கீழ் இருப்பதனால்,
தவழ்ந்து வாழ்கிறோம் என்கிறாய் -
நிமிர்ந்து அதன் உயரம் பார்க்காமலேயே...

எமது கைகள் கட்டப்பட்டு விட்டன...
கால்கள் முடக்கப்பட்டுவிட்டன...
என்று சொல்லிச் சொல்லியே
சோம்பேறிகளாய் ஆகிவிட்டோம்...-
இயலுமான அசைவுகளைக் கூடத்
தோலைத்துவிட்டு...

யார் யாரோடோ மோதுவதாய்
காட்டிக்கொள்கிறோம்.... - உள்ளே
தினம் ஒருவர் மற்றொருவருக்காய்
குழி பறித்துக்கொண்டே....

எமது முதுகெலும்பால் - நாமே
நிமிர்வதற்கு,
யார் தயவும் தேவையில்லை.....

நாமே நிமிர்வோம்.....
நம் குற்றங்கள் களைவோம்...
நம் கரங்களால் கட்டுவோம் -
நமக்கான நல்ல எதிர்காலம் ஒன்றை...

## நெம்பு

பசளைகள் போட்டு.. பூச்சிகள் பிடிக்காம பார்க்கிறனியோ..?

என்னது... என்னையே கேள்வி கேட்டுக் கொண்டு...

அப்ப ஆரைக் கேக்கிறது...?

ஆர் தந்தினமோ... அவையைத்- தானே கேட்கவேணும்...




# வலிகளைச் சுமப்போமா...?

வல்வை ந.அனந்தராஜ்

கடந்த மாத “நிமிர்வு” இதழில் வெளிவந்த “வலிசுமக்காத மேனியர்” என்ற கட்டுரை தொடர்பாக வாசகர்களிடம் இருந்து பெறப்பட்ட பல்வேறு தகவல்களும் விமர்சனங்களும் கட்டுரையின் பேசுபொருளுக்கான தீர்வுகளாகவும் காணப்படுவதைப் பார்க்கும் பொழுது மனதுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கிறது. கல்வி அடைந்துள்ள பெறுபேற்று வீழ்ச்சியினால் ஏற்பட்ட வலியை மாற்றும் வகையில் அவர்களது சிறந்த முன்வைப்புக்கள் மற்றும் கருத்துக்கள் ஒளடதமாக இருந்தன. எத்தனையோ பிரச்சினைகள் தொடர்பான கட்டுரைகளும் விமர்சனங்களும் ஊடகங்களில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன. இருந்த போதும் அவை தொடர்பாக ஆர்வம் காட்டாதவர்கள் “கல்வியிலான வீழ்ச்சிப் போக்கு” என்றதும் அவர்களிடம் எழுந்த துடிப்பையும், மனதில் எழுந்த பதை பதைப்பையும் பார்க்கும் பொழுது, இது நிச்சயமாக மீண்டும் எங்கள் பிள்ளைகளின் கல்வியில் பாரிய அபிவிருத்தியையும் மாற்றங்களையும் ஏற்படுத்த முடியும் என்பதைச் சுட்டி நிற்கின்றது.

ஆனால், வலியைச் சுமக்க வேண்டிய கல்விப்புலம் சார்ந்தவர்கள் இது தொடர்பாக எவ்வித ஆர்வமும் காட்டாத நிலையில் முற்றும் துறந்த முனிவர்களாக என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே என்று வாளாவிருப்பது தான் மனதுக்கு வேதனை அளிக்கின்றது.

ஆயினும் எமது இழந்த கல்வியை மீட்டெடுக்கும் போராட்டத்தில் மக்களின் உணர்வலைகள் தற்போதைய உண்மை நிலையைப் புடம் போட்டுக் காட்டியுள்ளன. அவர்களுடைய கருத்துக்களில் மாகாணசபைகள், முதலமைச்சர்கள், கல்வி அமைச்சர்கள், அரசியல்வாதிகள், கல்விப் பணிப்பாளர்கள், தொழிற்சங்கங்கள் எனப் பரந்துபட்டதாகத் தமது குறைபாடுகளை வெளிக்காட்டியுள்ளனர். அவற்றின் அடிப்படையில் இழந்து போயுள்ள எமது மாகாணங்களில் கல்வி பயிலும் குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியை எவ்வாறு முன்னெடுக்க முடியும் என்ற ஒரு உந்துதலைக் கொடுப்பதற்காக பொது மக்கள், கல்வியாளர்கள், முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், முன்னாள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்களினால் தெரிவிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் தொகுத்து அவற்றிற்கான தீர்வுகளையும் வழங்கி, அவற்றை நடைமுறைப்படுத்தும் வழி வகைகளையும் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். “நிமிர்வு” இதழில் வெளிவந்த மேற்படி கட்டுரை எனது முகநூலிலும் பின்னர் இடம்பெற்ற பொழுது அவை தொடர்பாகக் கிடைத்த ஐம்பதுக்கும் மேற்பட்ட கருத்துக்களில் இருந்து சிலவற்றை மட்டும் தொகுத்து அவற்றையே தீர்வாக எடுப்போமாக இருந்தால் தற்போதைய நிலையை விட 40 வீதத்தினால் ஆவது வடக்கு கிழக்கு மாகாணங்களின் கல்விப் பெறுபேற்றை உயர்த்த முடியும்.

**கருத்து–1: “இலங்கையில் முதலாவது இடத்தில் இருந்து அனைவருக்கும் பாடம் கற்பித்தவர்கள் எம்மவர்கள். ஆனால் இன்று, தமக்குள்ளேயே பிரச்சினைப்பட்டு முரண்பட்டு நிற்கின்ற கல்விச் சமூகத்தின் நிலையைப் பாருங்கள். எனவே எமது சொந்தங்களே ஒன்றுபட்டு எங்கள் பிள்ளைகளின் கல்வியைக் கட்டி எழுப்ப வாருங்கள்”** மனவேதனையின் வெளிப்பாட்டைக் காட்டியுள்ள ஒருவரின் உள்ளக் குமுறலைக் கேட்ட பின்னராவது, எம்மவர்கள் சிந்திக்க வேண்டும். தமிழ் மக்களுக்கென்றே உள்ள தனியான சிறப்பு வாய்ந்த குணமாக இருப்பதே இந்த ஒற்றுமை இன்மை தான். தமிழர்களிடையே புரையோடிப்போயுள்ள காட்டிக் கொடுப்புக்களும் ஒற்றுமையின்மையையும் கண்டு, இன்று உலகமே எள்ளி நகையாடுகின்றது. எங்களிடம் உள்ள ஒற்றுமையின்மையினாலேயே இன்று எமது இனம் பாரிய அழிவைச் சந்தித்து நிற்கின்றது என்பதையும் நாம் உணரத் தவறி விட்டோம். அதே போன்று தான் பாடசாலைப் பிள்ளைகளிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டிய கல்வித் துறையிலும் கூட இன்று ஒற்றுமையின்மையையும், முரண்பாடுகளையும் சாதாரணமாகக் காணமுடிகின்றது. பாடசாலைகள், வலயக் கல்வித் திணைக்களங்கள், மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களங்களில் இத்தகைய பதவி ரீதியாக ஏற்படும் அதிகாரப் போட்டிகளும், முரண்பாடுகளும், விட்டுக் கொடுப்புக்களின்மையும் காணப்படுவதை, அவர்களது ஒன்றுக்குப் பின் ஒன்று முரணான தகவல்கள், தீர்மானங்கள்

மற்றும் அறிக்கைகள் மூலமும் அறிய முடிகின்றது. உதாரண மாக மாகாணங்களின் கல்வி அமைச்சின் செயலாளர்களுக் கும், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் இடையிலான புரிந்துணர்வின்மையே பாடசாலை மட்டம் வரை எடுத்துச் செல்லப்படுகின்றது. கல்விச் செயலாளர் கல்வி அபிவிருத்தி சார்ந்த ஒரு தீர்மானத்தைச் செயற்படுத்த முன்வரும் பொழுது, மாகாணக் கல்விப் பணிப்பாளர் அதற்கு உடன்படாத ஒரு முரண்பாட்டு நிலையை எடுப்பதைப் பார்த்திருக்கின்றோம். எனவே மாணவர்களின் கல்வி உயர்வை இலக்காகக் கொண்டு கல்வித்துறை சார்ந்த ஒவ்வொருவரும், தராதரம், வயது, பிர தேசம், பதவி என்ற வேறுபாடுகள் இன்றி ஒரே வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் அவற்றை நடைமுறைப் படுத்துவதுடன், கண்காணிப்புக்களையும், பின்னூட்டல்களை யும் மேற்கொள்ள வேண்டும். இடையிடையே எழுமாற்றாகப் பாடசாலை மட்டத்திலான பின்னூட்டல்களையும், வழிகாட்டல் களையும் செய்துவர வேண்டும். இதற்கு அனைத்துக் கல்வி அதிகாரிகளும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட முன் வரவேண்டும். இங்கு கல்வித்துறை என்ற கட்டமைப்பின் கீழ் கல்விச் செயலாளரே அதிகாரத்தின் மேல் நிலையில் இருப்பவராதலால், அவரது தலைமைத்துவத்தின் கீழ் அனைத் துக் கல்வி அலுவலர்களும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வர வேண்டும்.

**கருத்து–2: “சரியானதைச் சரியான நேரத்தில் சரியாகச் செய்து வந்ததால், அன்று பரீட்சைப் பெறுபேறுகள் மட்டுமல்லாது பாடசாலைகளின் மாணவர்களின் ஒழுங்கு கட்டுப்பாடுகளும் மிகச் சிறப்பாகப் பேணப்பட்டிருந்தன. ஆனால், இன்று என்ன தவறுகள் விடப்பட்டாலும், பாடசாலைகளின் கல்வித் தரம் எப்படித் தான் கீழ்நோக்கிப் போனாலும், மாணவர்களின் ஒழுக்க விழுமி யங்கள் எப்படித்தான் சீரழிந்து போனாலும், எமக்கென்ன என்று கண்டும் காணாதது போல் இருக்கின்ற நிலை மாறவேண்டும்...”**

♦ இதற்கு இன்றைய சூழலில் அதிபர், ஆசிரியர்களுக்கு இருக்கும் பாதுகாப்பற்ற நிலைமையும், கட்டுப்பாடுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இன்று மாணவர்களோ அல்லது ஆசிரி யர்களோ எந்தத் தவறை விட்டாலும் அவர்கள் மீது நட வடிக்கை எடுக்க முடியாத அளவுக்குச் இறுக்கமான சட்டங்கள் நடைமுறையிலுள்ளன. இதனால் அதிபர், ஆசிரி யர்கள் அச்சம் காரணமாக தவறிழைத்தவர்கள் மீது நட வடிக்கை எடுக்காமல் ஏனோ தானோ என்று இருக்கின்றனர். இதனால் மாணவர்களின் ஒழுங்கும் கட்டுப்பாடும் பேணப் படாத நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மந்த மடைகின்றன. தவறுகள் விடப்படும் மாணவர்கள் தண்டிக்கப்படக் கூடாது என்ற புறநிலைச் சட்டங்கள் அகற்றப்பட்டு அதிபர்கள் ஆசிரியர்களுக்கான முழுமையான சுதந்திரம் வழங்கப்படவேண்டும். கல்வி அமைச்சின் சுற்ற றிக்கையிலுள்ள தண்டனைகள் வழங்குவது தொடர் பாகக் குறிப்பிடப்பட்ட சரத்துக்களையாவது நடைமுறைப் படுத்தும் அதிகாரங்களை அதிபர்களுக்கு வழங்க வேண்டும்.

♦ அதேவேளை ஆசிரியர்கள் அதிபர்களின் கட்டுப்பாடுகள் வரம்பு மீறும் வகையில் செல்லாத வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மிக இறுக்கமாக இருக்க வேண்டும்.

♦ க.பொ.த உயர்தரப் பாடசாலை ஒன்றின் அதிபராக இருந்த பொழுது, மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்காகவும் அவர்களது ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதற்காகவும், உயர்தர மாணவர்களைக் கூட நான் தண்டித்திருக்கின்றேன். அதேவேளை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களுடன் நல்லுறவைப் பேணி வந்ததனால், எவருமே எனது நடவடிக்கை களைத் தட்டிக் கேட்க முன்வரவில்லை. அன்று இவ்வாறான ஒரு சூழலில் கற்ற மாணவர்களே இன்றும் கீழ்ப்படிவுள்ள வர்களாகவும், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் இருப்ப துடன் உயர் நிலையிலும் இருந்து தமது ஆசிரியர்களை மாதிரி உருக்களாகப் பாவனை செய்து வாழ்க்கையில் பிரகாசிக்கின்றார்கள்.

**கருத்து–3 : “2009க்குப் பின்னர் அரசியல் தலையீடுகள் பாட சாலைகளிலும் கல்வி நிர்வாகத்திலும் அதிகரித்துக் காணப்படு கின்றன. இது பின்வரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன:”**

♦ **அரசியல்வாதிகளின் தலையீடுகள் காரணமாக ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரிகள் என எல்லா வள ஆளணியி னரும் சமமாகப் பகிரப்படாத நிலையில் இருப்பதால் பாட சாலைகள் கல்வி அலுவலகங்களில் ஏற்றத் தாழ்வுகள் நிலவு கின்றன.**

♦ **ஒரே பாடசாலையில் நீண்ட காலமாக கடமையாற்றும் அதிபர்களும் ஆசிரியர்களும் மந்த நிலைக்குள்ளாகி யிருக்கின்றார்கள். அவர்களை இடமாற்றம் செய்து புது இரத்தம் பாய்ச்சும் திராணி வலயக் கல்வி அதிகாரிகளுக்கு கிடையாது.**

♦ **ஆளுமையற்ற அரசியல்வாதிகளிடம் சிக்கி எந்தத்துறை யும் சின்னாபின்னமாகலாம், ஆனால் கல்வித்துறை சிதை வடைந்தால் எமது இனத்திற்கான எதிர்காலமே இல்லாமல் போய்விடும்.**

இவ்வாறான கருத்துக்கள் பலரால் முன்வைக்கப் பட்டுள்ளதைக் கொண்டு அரசியல்வாதிகளின் செல்வாக்கு பாடசாலைகளில் எந்த அளவுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை அறியலாம்.

மேற்படி கருத்துக்கு அமைவாக அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக முறையற்ற இடமாற்றங்களும், பதவி உயர்வு களும் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெற்றுக் கொண்டிருக் கின்றன. இன்று வடமாகாணக் கல்வி அமைச்சருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இவையும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

“சில அரசியல்வாதிகளின் அதீத தலையீடுகள் காரண மாக அதிபருடன் இணைந்து பாடசாலையின் வளங்கள் அழிக் கப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன், பாடசாலைச் சமூகத்தினரிடையே முறுகல் நிலையும் அமைதியின்மையும் காணப்படுகின்றன.” இந்தக் கருத்து தொடர்பாக அண்மையில் வடமராட்சியில் உள்ள ஓர் உயர்தரப் பாடசாலையின் கல்விச் சமூகத்தினர் ஊடகங்களிலும் நேரிலும் தெரிவித்த கருத்துக் கள் மூலம் அரசியல்வாதிகளின் அதீத தலையீடுகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். வடமராட்சியில் உள்ள ஒரு 1AB பாடசாலையில் ஒரு அரசி யல்வாதியின் தலையீடு காரணமாக அவருக்கும் பாடசாலை அதிபருக்கும் எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டமே நடைபெற்றது. அங்கு பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள், ஆசிரியர் குழு ஆகியோரினதும் தீர்மானத்தையும் மீறி 150 வருடங்கள் பழைமை வாய்ந்த சுமார் பதினைந்துக்கும்

மேற்பட்ட பெரு விருட்சங்கள் இரவோடிரவாகத் தறித்து வீழ்த் தப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாகப் பாட சாலைச் சமூகம் கல்விச் செயலாளர், வலயக் கல்விப் பணிப் பாளர், கல்வி அமைச்சர், விவசாய அமைச்சர் மற்றும் வன இலாக்காப் பகுதியினர், அரசாங்க அதிபர் ஆகியோருக்குப் பல முறைப்பாடுகள் செய்தது. இது தொடர்பாக அதிபர் மீதும் இதில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதி மீதும் நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக, இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புக் காட்டிவந்த எட்டு ஆசிரியர்களில், இருவருக்கு எச்சரிக்கும் வகையில் இடமாற்றமே வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பாடசாலை வளவினுள் எந்த ஒரு அரசியல்வாதியும் உள் நுழையக் கூடாது என்ற சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்து வதுடன், அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதிபர் கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். இன்று பல அரசியல்வாதிகள் தம்மை விழாக்களுக்கு முதன்மை விருந் தினராக அழைத்தால் தான் நிதி உதவி செய்வோம் என்று மிரட்டுகின்ற நிலை மாறவேண்டும். மாகாண நிதியோ அல்லது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான நிதியோ அவர்களது சொந்த நிதியல்ல. அவர்களுக்கு ஒதுக்கப் பட்ட நிதியில் என்னென்ன விடயங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று நியாயமாகப் பகுப்பாய்வு செய்து தேவை அடிப்படையில் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்பட வேண்டியது கட்டாயமானது. அதையும் மீறி அரசியல்வாதி கள் செயற்பட்டால், அந்த சிறு தொகைப் பணத்தையே தூக்கி எறிந்து விட்டு மக்களின் பலத்தில் ஒரு அதிபர் நிற்கும் மனோ பலம் உள்ளவர்களாகச் செயற்பட வேண்டும். இன்று பாராளு மன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் தமக்கு வருகின்ற நிதி ஒதுக்கீடு தொடர்பாக வெளிப் படைத் தன்மையைக்காட்ட வேண்டும். இவை தொடர்பான கணக்கறிக்கைகள், அவர்களைத் தெரிவு செய்த மக்களுக்குக் காட்சிப்படுத்த வேண்டும். இதனை மக்கள் தான் தட்டிக் கேட்க வேண்டும்.

**கருத்து–** 4: "**பாடசாலைகள் மாணவர்களின் கற்றல் கற்பித்தலுக் கானஅடித்தளக் களச் சூழல்களாக இருக்கும் போது இடர்ப்பாடு கள், இயலாமை, மட்டுப்பாடுகள், தேவைகள் என்பன களத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமே புரியும். அப்படியிருக்கும்போது , அபி விருத்திச் செயற்பாடுகள் போன்ற விடயங்களுக்கான திட்டமிடல் களும் தயாரிப்புகளும், மிகவும் பெருமளவிலான நிதியைச் செலவு செய்து, கல்வி அபிவிருத்தியுடன் தொடர்பற்றவர்களையும், வெளி நாட்டு நிபுணர்கள் என்று கூறப்படுபவர்களையும், ஓய்வு பெற்றவர் களையும் அழைத்து *AC* அறைகளினுள் வைத்து மேல்தளத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப் பிரதிநிதிகள், ஆசிரியர் தொழிற் சங்கங்கள் என்பவற்றின் கருத்துக்கள் பெறப்படுவதில்லை".**

இது மத்திய அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தாலும் ஒவ்வொரு பாடசாலையும் தமக்கே உரிய தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் கொண்டுள்ளன. அந்த வகையில் மாண வர்களின் தேவைகள் வசதிகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு கல்வி அபிவிருத்தி சார்ந்த சில செயற்றிட்டங்களை பாடசாலைகளே தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்கு உள்ளூரில் உள்ள அல்லது அயலில் உள்ள கல்வியாளர்கள் மற்றும் நிபுணத்துவ ஆலோசகர்களின் ஆலோ சனைகளையும் பெற்றுக் கொள்ளலாம். இதற்காகவே பாட சாலைகளுக்குத் தர உள்ளீடுகளினூடாகப் பெருமளவு நிதி ஒதுக்கப்படுகின்றது. ஆனால் அவை சரியான முறையில் செயற் படுத்தப்படவில்லை. இவற்றைப் பாடசாலை மட்டத்தில் நடை முறைப்படுத்தும் பொழுது மதிப்பீடுகளையும் பின்னூட்டல் களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இதில் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் களும் முக்கிய பங்காற்ற வேண்டும். ஏனெனில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே கல்வி அபிவிருத்தியைப் பாட சாலை மட்டத்தில் முன்னெடுக்கக்கூடிய முக்கியமான வள ஆளணியினர். இருந்த போதிலும், அவர்கள் முறையான ஒரு கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் நெறிப்படுத்தப்படுவதில்லை.

**கருத்து–5: "வடமாகாண சபை தோற்றம் பெற்ற பின்னரே கல்வி மிக மோசமான நிலையை அடைந்தது".**

இக் கருத்தைப் பலர் முன்வைத்திருந்ததுடன் கல்வி அமைச்சரின் பாராமுகத் தன்மையையும், முதலமைச்சரின் அக்கறையின்மையையும் சுட்டிக் காட்டியிருந்தனர். வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியின் வளர்ச்சிக் கும் வீழ்ச்சிக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் கல்வி அமைச்சர்களும் முதலமைச்சர்களுமே என்பதில் மாற்றுக் கருத் துக்கள் இல்லை. இந்த நிலையில் ஒவ்வொரு வலயங்களுக் கும் நேரடியாகச் சென்று கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய் வுக் கூட்டங்களை நடத்தி வருவதுடன் கல்வியில் பின்னடை வைக் காட்டுகின்ற வலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமானது. வினைத் திறன் அற்றவர்களை உடனடியாக அந்தப் பொறுப்பில் இருந்து வெளியேற்றி அவர்களுக்கு மீள்பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரை அவர்களது சம்பள ஏற்றங்களை யும் இடை நிறுத்தவேண்டும். இதற்காகவே இன்று பாட சாலைகளில் "ஆசிரியர் தரங்கணிப்பு" என்பது நடைமுறைப் படுத்தப்படுகின்றது. ஆனால், உண்மையில் அவை கல்வி அதிகாரிகளினாலோ அல்லது அதிபர்களினாலோ மீளாய்வு செய்யப்படுவதுமில்லை, உரியமுறையில் வழிகாட்டப்படுவது மில்லை.

**கருத்து–6 – "மாணவர்களின் கற்றலிலும் ஒழுக்கத்திலும் கண்டிப் பாக பெற்றோரின் வகிபாகம் முக்கியமானதாகும்".**

ஒரு பாடசாலையின் வளர்ச்சி என்பது மூன்று கல் அடுப்புக்குச் சமமானது. இதில் ஒரு கல் சறுகினாலும் பானையில் உள்ள அரிசி வேகாது. அதேபோன்று தான் பாடசாலையின் வளர்ச்சி யில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்போர் மூன்று கற்களைப் போன்றவர்கள். இதில் பெற்றோர் காட்டுகின்ற அக்கறை என்பது பிள்ளைகளின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. எங்கே பெற்றோர் பாடசாலை யின் மீது அக்கறை காட்டாது இருகின்றனரோ அங்கே நல்ல தரமான கல்வியையோ ஒழுக்கவிழுமியங்களையோ பேண முடியாது. இதில் ஒவ்வொரு பெற்றோரையும் ஈடுபடுத்தும் வகையில் அதிபர்கள் சில ஆரோக்கியமான வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

**கருத்து– 7: மாணவர்களின் கற்றல் குறைபாடுகளை நிலை யறி பரீட்சை மூலம் இனங்கண்டு, அதற்கமைய சரியான திட்ட மிடலின் மூலம் பரிகாரக் கல்வியை மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் ஒழுங்கான திட்டமிடலின் கீழ் மேற்பார்வை**

**இடம்பெற்று உரிய வழிகாட்டல்கள் மேற்கொள்ள வேண்டும். தற்போதைய கலைத் திட்டத்தில் க.பொ.த. சாதாரண தரத்திற்கும், உயர்தரத்திற்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இவ்வாறான இடைவெளியைக் குறைப்பதற்கு கல்வி மேம்பாட்டை நோக்கிய செயல்திட்டத்தை ஒவ்வொரு பாடசாலையும் தமது பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.**

இக் கருத்தானது முன்னாள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஒருவரினால் தெரிவிக்கப்பட்ட ஆரோக்கியமான கருத்தாக அமைந்துள்ளது. ஒரு பாடசாலையின் கல்வி அபிவிருத்தியில் உள்ள குறைபாடுகளும், தேவைகளும் பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடும். அவற்றைச் சரியான முறையில் இனங்கண்டு ஒவ்வொரு பாடசாலையும் தமது பாடசாலைச் சூழலுக்கு எற்றவகையிலான செயல் திட்டம் மற்றும் பரிகாரக் கல்வி நடவடிக்கைளையும், செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**கருத்து-8 : "தொழிற் சங்கங்களின் சில தேவையற்ற தலையீடுகள் காரணமாகப் பாடசாலையின் ஆசிரியர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.**

இது தொடர்பாகச் சிலர் கருத்துக்களைத் தெரிவித்த போது ஆசிரியர்களுக்குத் தொழிற்சங்கம் என்பது அவசியமானது தான். ஆனால் ஆசிரியர்களின் வேலை நேரம் தொடர்பாகவும் அவர்களின் ஆளுமை விருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் வைக்கப்படுகின்ற செயலமர்வுகள் பாடசாலை நேரங்களிலேயே நடத்தப்பட வேண்டும் என்று கோருவது முறையாகாது என்ற கருத்தையும் முன்வைத்தனர். ஒரு ஆசிரியரோ அல்லது அதிபரோ 24 மணித்தியாலமும் தனது பிள்ளைகளின் கல்வி பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள். இந்த நிலையில் பாடசாலை நேரங்களில் கருத்தரங்குகள் வைப்பதால், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும். இது நீண்டகால நோக்கில் பாரிய பாதிப்பை எமது குழந்தைகளின் கல்வியில் ஏற்படுத்தும். எனவே இந்த விடயத்தில் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து கல்வி அபிவிருத்தியை மேம்படுத்த உழைக்க வேண்டும். அதே வேளை ஒரு ஆசிரியருக்கு தொழில் ரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்டால், அதற்காக அவர்கள் ஒன்றிணைந்து போராடவும் வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்களில் பொது மக்களின் ஆதரவும் கிடைக்கும். அன்று நாங்கள் அதிபர்களாக இருந்த காலத்தில் செயற்பட்ட ஆசிரியர் சங்கங்கள் பாடசாலைச் செயற்பாடுகளில் ஒத்துழைத்து நடந்தமையினாலேயே எங்களால் உயர்ந்த பெறுபேறுகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

**இந்த இதழில் ஒரு சிலருடைய கருத்துக்களை மட்டும் முன்வைத்து அவற்றைத் தீர்வுகளாக எவ்வாறு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தலாம் என்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. மேலும் சிலரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பான விடயங்கள் அடுத்த இதழிலும் தொடரும். அதேவேளை இது தொடர்பாக வடக்குக் கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள கல்வியியலாளர்கள் தமது கருத்துக்களையும் முன்வைத்தால், இந்த விடயம் தொடர்பான முழுமையான தகவல்களைக் கொண்ட ஒரு வழிகாட்டிக் குறிப்பைக் கல்வி உலகத்திற்குக் கையளிக்க முடியும்.**




கலாநிதி கே.ரி.கணேசலிங்கம்

# காலநிலை மாறுதல் அரசியல்

காலநிலை மாற்றத்திற்கான பாரீஸ் உடன்பாடு அதிக அரசியல் பிரச்சனைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாறுதல் தொடர்பான 21ஆம் மாநாடு பிரான்ஸின் தலைநகரமான பாரீஸில் 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் கூடியது. உலகில் எழுந்துள்ள காலநிலை மாற்றத்திற்கு நாடுகளின் சுற்றுச்சூழலுக்கு விரோதமான கொள்கைகளே காரணம் என்றே நோக்கில் மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய உடன்பாடு 197 நாடுகளிடையே எட்டப்பட்டது. இத்தகைய உலக சூழலியலுக்கான உடன்பாட்டில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வைகாசி மாதம் அறிவித்திருந்தமை அதிக அரசியல் முக்கியத்துவத்தினை பெறுகிறது. சர்வதேச மட்டத்தில் காலநிலை அரசியல் ஒன்று தெளிவாக அரங்கேறி வருகிறது. அதனை இலங்கை அரசியலிலும் காண முடிகின்றது. தென் இலங்கை அரசியல் முக்கியஸ்தர் ஒருவர் அடுத்த ஐம்பது வருடங்களில் யாழ்ப்பாணம் பாலைவனமாகும் என்று ஓர் அதிர்ச்சியான அரசியலை வெளிப்படுத்தினார். அமெரிக்கா – சீனா இலங்கை ஆகிய மூன்று நாடுகளில் நிலவும் காலநிலை அரசியலை அலசுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அமெரிக்கா பாரீஸ் உடன்படிக்கையிலிருந்து வெளியேறியமையானதற்கு அது குறிப்பிடும் காரணங்களை முதலில் அவதானிப்போம். அமெரிக்காவில் பெரும்பாலான நிலக்கரி மற்றும் அனல்மின் நிலையங்களை முற்றாக மூடி விடுவதென்று முன்னாள் ஜனாதிபதி ஒபாமா இணங்கியதை ஏற்றுக் கொள்ளமுடியாது. சீனாவும் இந்தியாவும் அடுத்த 13 வருடங்களுக்கு இத்தகைய

குறைப்பினை படிப்படியாக மேற்கொள்ள அனுமதிக் கும் அதேவேளை அமெரிக்கா அவற்றை விரைவாக செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. இதனால் இது ஒருதலைப்பட்சமான உடன்படிக்கை. அதனால் அமெரிக்கா இவ்வுடன்பாட்டிலிருந்து வெளியேறு கிறது என குறிப்பிட்டது.

இங்கு அமெரிக்காவின் பிரச்சனை சுற்றுச்சூழல் அல்ல. மாறாக அமெரிக்காவின் தொழில்துறை பாரீஸ் உடன் பாட்டினால் பாதிக்கப்படும் என்பது மட்டுமேயாகும். மேலும் இதற்காக அமெரிக்கா அதிக செலவீனத்தை செய் வதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டார். ஏற்கனவே இவ்வுடன் பாட்டில் ஒபாமா நிர்வாகம் ஒப்பமிட்டிருந்தது. காலநிலை மாற்றத்தின் வேகத்தைக் குறைப்பதற்கான செயற்பாட்டு நிதியத்திற்கு செலுத்துவதாக உத்தரவாதமளித்த 3 பில்லியன் அமெரிக்க டொலர்களில் 500 மில்லியனை அது வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது ஒரு ஐந்தொகைக் கணக்கீட்டு அரசியலாகவே ட்ரம்ப் நிர்வாகம் கருதுகிறது. இங்கு சீனாவின் கை ஓங்கு கிறது என்பதே ட்ரம்பின் அரசியலாகும். ஒட்டுமொத்த பூகோளத்தின் வெப்பநிலையையே அதிகரித்து மனித இனத்தின் இருப்பையே அழித்து விடக்கூடிய காலநிலை மாற்றப் பிரச்சனையையும் இதர அரசியல் போட்டிகளில் ஒன்றாகவே அமெரிக்கா கருதுகிறது. ஆனால் சீனாவோ 2009 ஆம் ஆண்டில் கொப்பன்கேஹனில் கூட்டப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாறுதல் தொடர்பான 15 ஆம் மாநாட்டிலிருந்து சுற்றுச் சூழலில் அதிக கவனம் கொள்கிறது. அதனூடாக உலக நாடு களை கவர்ந்திழுப்பதில் வெற்றிகண்டு வருகிறது. உலகத்தை ஈர்ப்பது வன்அதிகாரத்தினால் அல்ல மென் அதிகாரத்தினால் மட்டுமே சாத்தியப்படுமென சீனா உணர்த்தி வருகிறது. இது ஒரு சீனா–அமெரிக்க இழுபறி அரசியல். இதன் தொடக்கம் கொப்பன்கேஹன் சந்திப்பு. அதிலிருந்து உலக நாடுகள் மத்தியில் சீனாவின் செல் வாக்கு மேலோங்கியுள்ளது.

இதனாலேயே அமெரிக்காவின் அணுகுமுறை சுற்றுச்சூழலுக்கு விரோதமானதென்பதை சீனா அடை யாளம் காட்டி வருகிறது. இதனை ஒபாமா நிர்வாகம் வெற்றிகரமாக கையாண்டது. ட்ரம்ப்பின் நடவடிக்கையை ஒபாமா கண்டித்துள்ளார். ஆனால் அமெரிக்காவுக்கான ஐ.நா வின் தூதுவர் சீனாவை கண்டித்துள்ளார். அமெரிக் காவின் சுற்றுச்சூழல் சார்ந்த கொள்கையை பற்றி வேறு எந்த நாடும் பேச முடியாதென ட்ரம்ப் நிர்வாகத்தினர் செயல்படுவதென்பது அமெரிக்காவின் பலவீனத்தை காட்டுகிறது.

அமெரிக்க–சீன போட்டி சுற்றுச்சூழலில் அதிகமான தாக மாறிவருகின்றது. காரணம் சீனா நிலக்கரிப்பயன் பாட்டினை அதிகம் கொண்டுள்ள நாடுகளின் வரிசையில் முதலாவது நாடு. ஆனால் 2016 முதல் அதில் அதிக மாற்றங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது. சீனா தனது தேவைக்கான எரிவாயுவில் ஐந்தில் ஒரு பங்கை இயற்கை யாகவே தருவித்து விட்டது. இது அமெரிக்காவை விட பல மடங்கு அதிகமானது. இதனால் அமெரிக்காவை முந்திக் கொண்டு சூழலைப் பாதுகாப்பதில் உலகளாவிய ரீதியில் முதன்மை நாடென நிறுவி வருகிறது. இது அமெரிக்க அர சியலில் உள்ள பலவீனமேயாகும்.

இலங்கையின் வெள்ள அனர்த்தத்துக்கு அமெரிக்கா 356 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. சர்வதேச வல்லரசு எனும் நிலையை ஏனைய நாடுகளின் இயற்கை அழிவுகளுக்கு கடனும் நன்கொடையும் வழங்குவத னால் மட்டும் சாத்தியப்படுத்த முடியாது. இதனால் தொடர்ச்சியாக நாடுகளை கையாள முடியாது. இயற்கையின் அழிவுகளால் தேடிக்கொள்ளும் அதிக வருமானத்தை பங்கு போடுவதனைவிட அத்தகைய இயற்கையை பாதுகாக்க முயல்வதே நிரந்தரமான உதவியும், கடனும், நன்கொடையுமாகும். இலங்கையைப் பொறுத்தவரை உலக நாடுகளிடமிருந்து உதவிகளை பெறுவதென்பது அரசியல்வாதிகளின் நலனுக்கானது. அமெரிக்கா, சீனா, இந்தியா என்பன தென் இலங்கை வெள்ள அனர்த்தத்திற்கு உதவி வருவதென்பது தென் இலங்கை அரசியலுக்கான முதலீடாகும். அரசியல் வாதிகள் இயற்கையை பாதுகாப்பதற்கு எத்தகைய பங் காற்றுகின்றார்கள் என்பது சுனாமிக்கான நிதியுத வியிலிருந்து இலங்கை மக்கள் உணர்ந்து கொண் டுள்ளார்கள். அதனைக் கடந்து பணிபுரியும் அமைச்சர் களையும், ஆட்சியாளர்களையும் கண்டு கொள்வது கடினமாக உள்ளது.

தற்போது வடக்கு மாகாணசபையில் அப்படி இயற் கையை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிக்கான அமைச்சர் ஒருவரை அதிகார துஷ்பிரயோகம், பணம் வீண்விரய மாக்கப்பட்டது என்ற பெயரில் அரசியலிருந்து அப்புறப் படுத்த பலர் முனைகின்றனர். இத்தகைய முயற்சிக்கு பின்னால் ஐம்பது வருடங்களில் யாழ்ப்பாணம் பாலைவன மாகும் என்ற உரைக்கும் இடையில் அதிக தொடர்புள்ள தென்பது தெளிவாக உணரமுடிகிறது. அரசியலும், அதன் நிறுவனங்களும் மனித சமூகத்தின் அடிப்படைகளுக் கானவை. ஆனால் இன்றைய நட்பு முதலாளித்துவத்தில் (Crony Capitalism) நிதிநிறுவனங்களும் அரசுகளுக் குமான உறவு பலமானதாக மாறிவிட்டது. அரசுகள் மக் களுக்கு பதிலளிப்பதில் கரிசனை கொள்கின்றன. இயற்கை யின் மீள் கட்டமைப்பு நிதி நிறுவனங்களாலேயே தீர்மானிக் கப்படுகிறது. எனவே பாரிஸ் முதல்– வடமாகாணசபை வரை காலநிலை மாறுதல் தெளிவான அரசியல் போட்டியை உருவாக்கியுள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவுகூரல்



சிந்து

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வழமை போல் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாகவே நடந்து முடிந்துள்ளது. மே 18 க்கு முன்னரான நாட்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலப்பகுதிகளில் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் பல்வேறு இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றாலும், மே 18 அன்று முள்ளிவாய்க்காலில் எல்லா பொது அமைப் புக்களும், கட்சிகளும் ஓரணியில் நின்று ஒரே இடத் தில் நடத்துவது தான் முறைமை. ஆனால், இம்முறை யும் வேறு வேறு நேரங்களில் வெவ்வேறு இடங்களிலும் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சில நிகழ்வுகளில் குழப்பங் களும் இடம்பெற்றுள்ளன. இவற்றை உறவுகளை இழந்து வேதனையில் தவிக்கும் மக்கள் துளியளவும் ரசிக்க வில்லை.

தமிழ் மக்களைப் பாதித்த, பாதிக்கும் விவகா ரங்களைக் குறித்து தொடர்ச்சியாக விழிப்போடு வைத் திருக்கவல்ல ஓர் அரசியல் வேலைத்திட்டமோ அல்லது அதற்கு வேண்டிய அரசியல் தரிசனமுடைய பலமான அமைப்போ, அதிகார மையமோ தமிழ் மக்கள் மத்தி யில் இல்லை என்பது கவலைக்குரியது. அப்படியொரு அமைப்பு அல்லது மையம் இருந்தால் அது தமிழ் மக்களின் அரசியலைத் தீர்மானிக்கும் எல்லா விவகாரங்களையும், நிகழ்வுகளையும் குறித்து ஓர் ஒட்டுமொத்தத் தரிசனத் தைக் கொண்டிருக்கும். அப்படியோர் அரசியல் தரி சனம் இருந்தால் தான் தமிழ் மக்களின் அடுத்தகட்ட அரசி யலைக் குறித்த தெளிவான ஒரு வழிவரைபடமும் இருக்கும். அப்படியோர் ஒட்டுமொத்த அரசியல் தரிசனம் இருந்தால் தான் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அதற்கேயான முக்கியத்துவத்துடனும், அனைத்துலகப் பரிமாணத்துடனும், தீர்க்கதரிசனத்தோடும் திட்டமிடலாம். என அரசியல் பத்தியாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.


முள்ளிவாய்க்காலில் இழந்த எம் சொந்தங்களை கூட்டாக நினைவு கூர்வதன் மூலம் ஒற்றுமையே பலம் என்பதனை தமிழ் மக்கள் நிறுவ முடியும். பாதிக்கப்பட்ட வர்களின் உளவுரணைக் கட்டியெழுப்ப முடியும். கடந்த எட்டு ஆண்டுகளுக்குள் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கு பொது நினைவிடத்தை நிறுவி இருக்க வேண்டும். ஆனால் அவை எதுவும் நடக்கவில்லை. ஆனால் நினைவு கூரும் நாளான மே 18 அன்று அரசியல் தலைவர்கள் வாகனங்களில் சீறிக் கொண்டு வருவார்கள். விளக்கேற்றுவார்கள், மலர் தூவுவார்கள், உணர்ச்சி பொங்க நான்கு வரிகளில் பேசுவார்கள். பின் தங்கள் சொகுசு வாகனங்களில் பறந்து விடுவார்கள். உறவுகளை இழந்த மக்களோ கண்ணீருடனும், ஆற்றாமையுடனும் மண்ணில் புரண்டு கதறி அழுவார்கள்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களில் ஒரு தொகுதியினருடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக் கற்களைப் பதிப்பதற்கு அருட்தந்தை எழில் ராஜன் நடவடிக்கை மேற்கொண்டார். அந்நடவடிக்கை தேசிய பாதுகாப்புக்கும், பொது அமைதிக்கும் சமாதானத் திற்கும் பங்கம் விளைவிக்கும் செயற்பாடாகும் என முல்லைத்தீவு நீதிமன்றத்தில் காவல்துறையினர் வழக்கு தாக்கல் செய்தனர். அந்த நிகழ்வை நடத்தவிடாமல் இடைநிறுத்தல் உத்தரவை நீதிமன்றத்தில் பெற்றனர். ஆனாலும் இறுதியில் அந்நிகழ்வு நடாத்த அனுமதி அளிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு ஆவணமாக்க முற்பட்டமையால் தான் அருட்தந்தை எழில்ராஜன் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டார். நீதிமன்றத் தடைக்கும் உள்ளாகியிருந்தார். உண்மை யில் இந்தப் பொறுப்புள்ள, சிக்கலான பணியை அமைப்புக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் தான் செய் திருக்க வேண்டும்.

தமிழ் தேசிய துக்க நாளான அன்று தமிழர் தாயகம் உண்மையில் துக்கத்தை கடைப்பிடித்ததா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். எல்லாமே வழமை போல் இயங்கின. தலைமைகள் தனித்து தனித்து செயற்பட்டமையால் மக்களையும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்க முடியவில்லை. தமிழ் மக்களின் மாபெரும் இனப்படுகொலை நிகழ்ந்தேறிய

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

# யாப்பு: மாகாண சபைகள்



மாகாண சபை எமக்கு எதுவுமே செய்ய வில்லை, அது இருந்தும் என்ன பயன், அதன் அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்று எம்மில் பலர் அங்கலாய்க்கிறோம். ஆனால் அம்மாகாண சபை நாம் எதிர்பார்ப்பன வற்றை வழங்குமளவுக்கு அதிகாரம் கொண்டுள்ளதா என்று ஆராய்ந்து பார்க்கத் தவறிவிடுகிறோம்.

மத்திய அரசாங்கம், மாகாணசபை கள் மற்றும் உள்ளூராட்சிசபைகள் என்பவற்றுக் கிடையான உறவுகள் தொடர்பில் புதிய யாப்பில் இடம்பெற வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமையில் ஓர் உபகுழு நியமிக்கப்பட்டது. இவ்வுபகுழுவின் அறிக் கையை வாசித்தாலே பல உண்மைகள் தெரிய வரும். இவ்வறிக்கையின் முதலாம் பாகத்தை சென்ற இதழில் வெளியிட்டோம்.

மாகாணசபைகளும் ஆளுனரின் அதி காரங்களும் தொடர்பாக இவ்வறிக்கையில் உள்ளனவற்றை இந்த இதழில் தருகிறோம்

– ஆசிரியர்.

பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தின் குறுகிய கட்டமைப்பும், மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பாக யாப்பின் தெளிவின்மை யும் மாகாண சபைகளினூடாக அதிகாரப் பகிர்வுக்கு தடை களாக உள்ளன. மேலும் நிறைவேற்று அதிகாரங் கள் குவிந்துள்ள ஜனாதிபதி ஆட்சி முறை மற்றும் மாகாண சபைகளின் மட்டுப்படுத்தப்பட்ட நிதி அதி காரம் என்பனவும் அதிகாரப் பகிர்வுக்கு தடைகளாக உள்ளன. நாட்டின் ஒற்றையாட்சி அரசியலமைப்பும் ஒரு தடைக்கல் என குழு உறுப்பினராலும் அழைக்கப்பட் டோராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

மாகாண அபவிவிருத்திக்கென திறைசேரியால் ஒதுக்கப்படும் நிதிகள், அவை எவ்வாறு செலவு செய் யப்படலாமென கட்டுப்படுத்தும் கண்டிப்பான அறிவுறுத் தல்களுடனேயே வழங்கப்படுகின்றன. மேல்மாகாண சபை உள்ளிட்ட ஓரிரு சபைகளைத் தவிர ஏனைய மாகாண சபைகள் இந்த அறிவுறுத்தல்களை வெறுமனே அங்கீ கரிக்கும் சபைகளாகவே உள்ளன. மாகாணசபைகளில் வரவு செலவுத்திட்டங்கள் ஏகமனதாகவே நிறைவேற் றப்படுகின்றன. இது மாகாணசபை உறுப்பினர்களிடையே ஒருமைப்பாட்டைக் குறிக்கவில்லை. மாறாக மாகாண சபைகளின் மீதான மத்தியின் கட்டுப்பாட்டுக்கும் தமது அதிகாரமின்மைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு செயலாக இது எடுத்துக் கொள்ளப்படலாம்.

செயற்திறனும் சட்டநிறைவேற்று அதிகாரமும் உள்ள மாகாண சபைக்கு ஒரு உயிர்ப்பான ஜனநாயக சூழல் அவசியமானது. ஒரு ஆரோக்கியமான எதிர்க்கட்சியும் அவசியமாகும். ஒரு விழிப்பான எதிர்க்கட்சியின் விமர் சனங்களின்றி ஆளும்சபை தனது செயற்பாடுகளில் மந்த மாகவும் செயற்திறன் அற்றுப்போகவும் வாய்ப்புகள் உள்ளன. இதனையுணர்ந்தே நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஒரு ஆளும் சபை அடிப்படையிலான ஆட்சி– முறை சோல்பரி ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டது.

## ஆளுனரின் அதிகாரங்கள்

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு ஆளுன ருக்கு மாகாணசபைகளின் நிறைவேற்று மற்றும் சட்ட வாக்கப்பணிகளில் தலையிடக்கூடிய அதிகாரங்களை பதின்மூன்றாம் சட்டமூலம் வழங்குகிறது. அது மாகாண சபை மீதான மத்திய அரசின் அதிகாரத்தைப் பிரதிநிதித்து வப்படுத்துகிறது. இவ்வகையான கட்டமைப்பு அதிகாரப் பகிர்வின் அடிப்படையையே தகர்க்கிறது.

மாகாண பொதுமக்கள் சேவையின் அலுவலர்களை நியமித்தல், இடம் மாற்றல், பதவிஉயர்த்தல், பதவி விலக் கல் என்பவற்றுக்கான அதிகாரங்கள் ஆளுனரிடமேயே உள்ளன. மாகாண சபை அமைச்சர்களால் எடுக்கப்

படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்படும் அலுவலர்கள் மீது கூட எந்தவிதமான அதிகாரமும் அற்ற நிலையிலேயே ஒரு மாகாணசபை உள்ளதென இதன் மூலம் தெளிவாகவே தெரிகிறது. இவ்வலுவலர்கள் மாகாண சபைக்கு விசுவாசமாக இருப்பர் என எதிர் பார்க்க முடியாது.

மாகாண முதலமைச்சரும் அமைச்சரவையும் ஆளுனரின் செயற்பாட்டுக்கு ஆலோசனையும் உதவிகளுமே வழங்க முடியும். மாகாண சபைக்கும் ஆளுனருக்குமிடையே கருத்து முரண்பாடு ஏற்படுமிடத்து ஆளுனரின் முடிவே இறுதியானது. இம்முடிவுக்கு எதிராக எந்தவொரு வழக்கும் தொடரப்பட முடியாது.

ஆளுனரின் பரிந்துரையின்றி நிதியுடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு சட்டமும் மாகாண சபையினால் கருத்தில் எடுக்கப்பட முடியாது. மாகாணசபையினால் நிறைவேற்றப்படும் எந்தவொரு சட்டமும் ஆளுனர் அனுமதித்த பின்னரே அமுலாக்கப்படலாம். ஆளுனர் அனுமதிக்காத பட்சத்தில் அச்சட்டத்தை மாற்றும் பரிந்துரைகளுடன் அதனை மாகாண சபைக்கு திருப்பி அனுப்பும் அதிகாரம் ஆளுனருக்கு உள்ளது. மத்தியில் கூட பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டத்தை நிராகரிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது. அப்படியிருக்க மாகாண ஆளுனருக்கு இவ்வதிகாரம் இருப்பதன் காரணம் என்ன?

ஆளுனர் அனுமதிக்காத ஒரு சட்டத்தை மாகாணசபை அங்கீகரிக்குமாயின் அதனை ஜனாதிபதியின் அனுமதிக்கென ஆளுனர் அனுப்பி வைக்கலாம். அச்சட்டத்தின் அரசியல் அமைவுத்தன்மைத் தீர்மானிப்பதற்காக அதனை உச்ச நீதிமன்றுக்கு ஜனாதிபதி அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் இதற்கென ஒரு கால எல்லை இல்லை. இதனால் மாகாண சபையால் இயற்றப்படும் சட்டங்கள் ஆளுனரால் ஏற்றுக்கொள்ளப்படாதவிடத்து அச்சட்டங்கள் உரிய நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படாது.

சில ஆளுனர்கள் தமது சட்ட வரம்புகளை மீறி ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதிகளாக செயற்படுகின்றனர். இது மாகாணசபையின் அதிகாரத்தை மத்தியால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியின் கையில் சமர்ப்பித்துவிடுகிறது. மாகாண சபையின் சுயாதீனத்தையும், பொறுப்புக்கூறலையும் அர்த்தமற்றதாக்கிவிடுகிறது.

நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கலைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் வேளையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுனருக்கு அதிகாரங்கள் அளிக்கப்படுதல் நிறைவேற்று அதிகார ஆட்சியை இன்னொரு உருவில் தொடர்வதாகும். மக்களுடன் நெருக்கமாக இருக்கும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களே மத்திய அரசைவிட மக்களுக்கு பொறுப்பாகவும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

மேற்குறித்த அவதானிப்புக்களிலிருந்து இவ்வுபகுழு பின்வரும் முக்கிய விதப்புரைகளை முன்வைக்கிறது.

1. ஆளுனர் தன்னியல்பாகச் செயற்பட அனுமதிக்கும் சட்டமூலங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். இது வரை அரசியல் யாப்பில் காணப்படும் ஆளுனரின் தற்றுணிவு செயற்பாடுகளைத் தவிர ஏனைய விடயங்களில் ஆளுனர் மாகாண முதலமைச்சரினதும் அமைச்சரவையினதும் ஆலோசனைகளுக்கு அமைய நடக்க வேண்டிய ஒரு பெயரளவில் நியமிக்கப்பட்ட அதிகாரியாக இருக்க வேண்டும்.
2. மாகாண பொதுமக்கள் சேவை ஒரு சுயாதீன மாகாண பொதுமக்கள் சேவை ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.
3. மாகாண பொலிஸ் சேவை ஒரு சுயாதீனமான மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.
4. மாகாண சபைகளில் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு ஆளுனரின் அனுமதி பெறப்பட வேண்டுமென்ற நியதி கைவிடப்பட வேண்டும்.
5. மாகாணசபைகளில் நிறைவேற்றப்படும் சட்டங்களின் அரசியலமைப்பு அமைவுத்தன்மை நீதிமன்றங்களால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
6. மாகாணசபையின் நிதி சம்பந்தப்பட்ட சட்டவாக்கங்களுக்கு ஆளுனர் பரிந்துரை தேவையென்ற நியதி கைவிடப்பட வேண்டும்.
7. ஆளுனர் மாகாண முதலமைச்சரின் ஒப்புதலுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படல் வேண்டும்.
8. மாகாணத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலையும் பட்ச–த்தில் மாகாண அரசை மத்திய அரசின் கட்டுப்பா–ட்டுக்குள் கொண்டு வரும் சட்டங்கள் வலுவாக்கப்பட வேண்டும்.

**சுயாதீன பொதுமக்கள் சேவை ஆணைக்குழு**

மேற்குறிப்பிட்டவாறு மாகாண பொதுமக்கள் சேவை அலுவலர்களைக் கட்டுப்படுத்துவதற்கான எல்லா அதிகாரங்களையும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலம் ஆளுனருக்கு வழங்கியுள்ளது. திட்டங்களை உருவாக்குதல், ஆட்சேர்ப்பு, நடைமுறை வழமைகள், பதவி உயர்வு, இடமாற்றம், பதவி நீக்கம், விசாரணை உள்ளடக்கிய எல்லா அதிகாரங்களும் ஆளுனரிடமேயே உள்ளன. மேலும் இந்த பொது சேவை அலுவலகம் தொடர்பாக எவராவது முறைப்பாடு செய்தால் அதன் மீதான தீர்ப்பு வழங்கும் அதிகாரமும் ஆளுனரிடமேயே உள்ளது.

ஆகவே பொதுசேவைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கே இல்லாத அதிகாரங்கள் ஆளுனருக்கு இருப்பது தெளிவாகிறது. பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தில் மாகாண முதலமைச்சரினதும் அமைச்சரவையினதும் பரிந்துரைகளுக்கு ஆளுனர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்

நடவடிக்கைகள் தொடர்பாக கேள்வி கேட்கவோ எந்த நீதிமன்றுக்கும் அதிகாரம் இல்லை. இது ஆளுனருக்கு தடையற்ற அதிகாரங்களை வழங்குகிறது.

இதனால் மாகாண அமைச்சரவையின் உத்தரவுகளை நடைமுறைப்படுத்த வேண்டிய அவர்களது செயலாளர்கள் ஆளுனரின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றனர். அவர்கள் தமது துறைசார்ந்த அமைச்சரைவிட ஆளுனருக்கே அதிக கடப்பாடு உள்ளவர்களாக உள்ளனர்.

மேலும் பொதுசேவைகள் பலவற்றை நாடளாவிய பொது சேவை என வகைப்படுத்துவதாலும் மாகாண பொது சேவை பாதிப்புக்குள்ளாகிறது. அத்துடன் மாகாண பொது சேவைக்கு அலுவலர்களை நியமிப்பதற்கு திறைசேரியின் நிர்வாக சேவைத்திணைக்களத்திலிருந்து அனுமதியைப் பெறவேண்டும் என்ற சட்டம் மாகாண பொதுச் சேவையைப் பாதிக்கிறது.

மேற்குறித்த அவதானிப்புகளிலிருந்து பின்வரும் விதப்புரைகளை இக்குழு முன்வைக்கிறது.

1. மாகாண பொதுச்சேவை ஒரு சுயாதீனமான மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட வேண்டும்.
2. இவ்வாணைக்குழுவுக்கு மாகாண முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டாக உறுப்பினர்களை நியமிக்க வேண்டும். இந்நியமனங்கள் அரசியலமைப்புச் சபையால் அங்கீகிக்கப்படல் வேண்டும்.
3. மாகாண பொதுச் சேவைக்கு அலுவலர்களை நியமித்தல் பதவி உயர்த்தல், இடமாற்றல், வேலைநீக்கம் போன்றவை சுயாதீனமான மாகாண பொதுசேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்பட வேண்டும்.
4. மாகாண அமைச்சரவையே மாகாண பொதுசேவை அலுவலர்கள் தொடர்பான எல்லா அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.
5. நாடளாவிய பொதுச்சேவைகள் என்பது நிர்வாக சேவை, பொறியியல் சேவை, அரச மருத்துவ அலுவலர் சேவை, பொலிஸ் அலுவலர் சேவை, விஞ்ஞான அலுவலர் சேவை, கணக்காய்வாளர் சேவை என்பவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட வேண்டும். நாடளாவிய பொதுச்சேவை அலுவலர்கள் மாகாண சபைகளில் கடமையாற்றுவதை தேசிய பொதுச்சேவை ஆணைக்குழுவும் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவும் கலந்தாலோசித்து முடிவெடுக்கும்.
6. மாகாணசபை பொதுச்சேவை அலுவலர்கள் மத்திய பொதுச்சேவை அலுவலகங்களில் இணைந்து கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.
7. நாடளாவிய பொதுச்சேவை அலுவலர்களுக்கும் மாகாண பொதுச்சேவை அலுவலர்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
8. மாகாண நிர்வாக சேவை எனத் தனிப்பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்பிரிவில் உள்ளவர்கள் மாகாண சபைகளுக்கிடயே இடமாற்றம் பெறலாம்.
9. அதிகாரப் பரவலாக்கலை செயற்திறனுள்ளதாக்கவும் அரசாங்கத்தில் இரட்டைத் தன்மையை இல்லாதொழிக்கவும் மாவட்டச் செயலகங்கள் மாகாண நிர்வாகத்தின் அங்கமாக உள்வாங்கப்பட வேண்டும். அரசாங்க அதிபரும் பிரதேச செயலாளர்களும் மாகாண பொதுச் சேவையில் கூடுதல் பிரதம செயலாளராகவும், உதவி செயலாளர்களாகவும் உள்வாங்கப்படல் வேண்டும்.
10. கிராம சேவையாளர் எல்லோரும் மாகாண பொதுச் சேவைக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

**மாவட்ட அரசாங்க அதிபர்களினதும் பிரதேச செயலாஎர்களதும் செயற்பாடுகள் தொடர்பாக இவ்வுப குழுவின் பரிந்துரைகளை அடுத்த இதழில் பார்ப்போம்.**

**(20 ஆம் பக்க தொடர்ச்சி)**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள், சமூக சேவையாளர்கள், பொது மக்கள், மாணவர்கள் என பல தரப்பையும் உள்ளடக்கிய ஒரு பொதுக் குழு சிறப்பான ஒழுங்கமைப்புடன் ஒரே இடத்தில் நடத்துவதே சாலச் சிறந்ததாகும்.

வழமையாக தமிழ்நாட்டில் மெரீனா கடற்கரையில் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுவது வழமையாகும். மெழுகுவர்த்திகளை ஏந்தி அமைதியாக இடம்பெறும் இந்நிகழ்வில் அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் என பலரும் ஒன்று திரண்டு அஞ்சலி செலுத்துவது வழமையாகும். வழமை போல் இம்முறையும் நினைவேந்தல் சிறப்பாக இடம்பெற்ற நிலையில் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன்காந்தி உட்பட 17 பேர் தமிழக காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான கூட்டான ஒருங்கிணைப்புக்களை இந்தியாவும் விரும்பவில்லை. மத்திய அரசின் உத்தரவுப்படி தமிழ்நாட்டு அரசு மேற்படி கைதை செய்துள்ளது தமிழின உணர்வாளர்களை கொந்தளிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

மொத்தத்தில் தமிழினப்படுகொலையை ஆவணமாக்குவதனை இலங்கை அரசும் தடுக்கிறது. பேரெழுச்சியுடன் தாய்த்தமிழகம் இனப்படுகொலைக்குள்ளான ஈழத்தமிழ் மக்களை நினைவுகூர்வதை இந்திய மத்திய அரசாங்கமும் தடுக்கிறது.

நாம் அனைவரும் கூட்டாக ஒன்றிணைந்து இவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய வரலாற்றுத் தருணமிது. அடுத்த வருடம் முள்ளிவாய்க்காலில் எம் சொந்தங்களின் தியாகங்களை கூட்டாக நினைவேந்த அர்ப்பணிப்புடன் இப்போதே தயாராகுவோம்.

# தேசியத்தின் குறியீடு




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுனரிடம் சமர்ப்பித்திருக்கும் விவகாரம் வடக்கில் பெரும் கொந்தளிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான அறிக்கையின் அடிப்படையில், இரு அமைச்சர்களை பதவி விலகுமாறும், இருவரை கட்டாய விடுமுறையில் செல்லுமாறும் முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளை புறந்தள்ளி அவருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டமையே தமிழ்மக்களின் கொந்தளிப்புக்கு காரண-மாக அமைந்துள்ளது.

இலங்கை உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியான விக்கினேஸ்வரன் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு 1,32,255 விருப்பு வாக்குகளை பெற்று வடமாகாண சபையின் முதலமைச்சராக 2013 இல் பதவியேற்றிருந்தார். கடந்த நான்கு வருடங்களாக பெரிதாக அதிகாரங்கள் எதுவும் அற்ற வடமாகாண சபை இனப்படுகொலை உள்ளிட்ட ஏராளமான தீர்மானங்களை நிறைவேற்றியும் குறிப்பிடத் தக்க அளவில் மக்கள் நலன்சார்ந்தும் இயங்கியிருக்கிறது. மேலும், இழுத்த இழுப்புக்கெல்லாம் யார் பக்கமும் சாய்ந்துவிடாமல் மக்கள் பக்கம் முதலமைச்சர் நின்று இருக்கின்றார்.

இந்நிலையில் இலஞ்சம், ஊழல், நிர்வாக முறைகேடுகளுக்கு எதிராக வடமாகாண அமைச்சர்கள் மீது தொடர்ச்சியாக பல்வேறு தரப்புக்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்டு வந்தது. மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் சில அமைச்சர்களின் ஊழல் விவகாரங்கள் தொடர்பில் வடமாகாண சபை அமர்வுகளில் தொடர்ச்சியாக கருத்துக்களை தெரிவித்து வந்தனர். அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்கு சுயாதீன விசாரணைக்குழு ஒன்றை முதலமைச்சர் நியமித்தார். அக்குழுவின் அறிக்கையை வெளியிடாமல் தனக்கு வேண்டப்பட்டவர்களைப் பாதுகாக்க முற்படுகிறார் என முதலில் குற்றச்சாட்டு எழுந்தது. பின்னர் அறிக்கையின் பிரகாரம் இரு அமைச்சர்களைப் பதவி விலகும்படியும் மற்றய இரு அமைச்சர்களை ஒரு மாதம் கட்டாய விடுப்பில் இருக்கும் படியும் முதல்வர் உத்தரவிட்டார். தான் சேர்ந்திருக்கும் கட்சியின் அபிலாசைகளை மீறி சுயாதீனமாக முடிவெடுத்ததனால் தான் முதலமைச்சருக்கு எதிரான சதிச் செயல் அரங்கேறியது. கட்டாய விடுப்பு என்பது பதவி நீக்கம் அல்ல என்பதும் இந்நடைமுறை ஏனைய ஜனநாயக நாடுகளில் சாதாரணமாக பின்பற்றப்படும் நடைமுறை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியவை.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் கையெழுத்திட்டு முதலமைச்சரை பதவி நீக்குமாறு கோரி அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை ஆளுனரிடம் கையளித்ததன் பின்னர் தான் முதலமைச்சருக்கு ஆதரவான அலை தாயகத்தில் வலுப்பெறத் தொடங்கியது. அடுத்த நாளே தன்னெழுச்சியாக வடமாகாண சபைக்கு முன்னால் திரண்ட இளைஞர்கள் “மக்களின் முதல்வரை அகற்ற துரோகிகளுடன் கூட்டா?”, “மக்களின் முடிவை மறுதலிக்க நீங்கள் யார்?” போன்ற பதாகைகளுடன் வடமாகாண சபைக்கு முன்னால் திரண்டு கோஷமிட்டனர். பின்பு கோவில் வீதியில் உள்ள முதலமைச்சரின் வீட்டுக்கு சென்று அங்கும் முதலமைச்சருக்கு ஆதரவாக கோஷமிட்டனர். வெளியே வந்த முதலமைச்சர் மக்களை பார்த்து “நான் உங்களுடன் இருப்பேன்” என்று கூறிய போது இளைஞர் கூட்டம் ஆரவாரித்தது.

அதற்கடுத்தநாள் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் ஹர்த்தாலும் அனுட்டிக்கப்பட்டது. நல்லூரில் இருந்து ஆரம்பமான பேரணி முதலமைச்சரின் வீடு வரை சென்று நிறைவடைந்தது. இதில் ஆயிரம் வரையிலான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். கடந்து போன சம்பவங்கள் தமிழ் மக்கள் இன்னும் தமிழ்த் தேசிய உணர்வுடன் தான் உள்ளனர் என்பதனை மெய்ப்பித்திருக்கிறது. மக்கள் வாக்களித்து விட்டு பேசாமல் இருந்துவிடுவார்கள், பின் அரசியல்வாதியாகி எதனையும் செய்து விடலாம் என்கிற சிந்தனைக்கு மக்கள் தக்க பாடம் புகட்டியுள்ளார்கள்.

இங்கு அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக முதலமைச்சர் எடுத்த எடுக்காமால்விட்ட நடவடிக்கைகளை மக்கள் அங்கீகரிக்கிறார்கள் என்பதல்ல கருத்து. தமது தலைவிதியை நிர்ணயிக்கும் இது போன்ற முக்கிய விடயங்கள் தம்மைக் கலந்தாலோசிக்காமல் கட்சி அரசியலூடாக தீர்மானிக்கப்படுவதை மக்கள் ஏற்கத் தயாராயில்லை என்பதே முக்கிய புள்ளி. முதலமைச்சருக்கு எதிரானவர்கள் மக்கள் மத்தியில் வந்து ஆலோசனைக் கூட்டங்களை, கலந்துரையாடல்களை நடத்தி பொதுவான அபிப்பிராயம் ஒன்றை உருவாக்கி அதனடிப்படையில் நடவடிக்கை எடுத்திருந்தால் நாம் இன்றைய நிலைக்கு வந்திருக்க மாட்டோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முதல்வர் வேட்பாளராக நிறுத்தப்பட்டு அவர் வெற்றி பெற்றிருந்தாலும், கட்சி அரசியல் ஊழல் என்பவற்றுக்கு அப்பால் தமிழ் மக்களின் தேசிய நலன்சார்ந்து முயற்சிகளை எடுத்துள்ளார். மாகாண சபை முதலமைச்சர் என்ற வகையில் மக்களுக்கு கிட்டவாக இருக்கிறார். தான் சார்ந்த கட்சியினரின் எதிர்ப்பையும் தாண்டி முதலமைச்சர் விக்கினேஸ்வரன் யாருடைய நிகழ்ச்சி நிரலுக்குள்ளும் இல்லாமல் தனித்து நிற்பது, செயற்படுவது மேற்குலகு, இந்தியா, இலங்கைக்கு பெரும் நெருக்கடியை கொடுக்கின்றது என்பதனையும் மக்கள் அவதானிக்கிறார்கள். அதனால் தமது தேசியத்தை அடையாளப்படுத்தும் ஒரு குறியீடாக தமிழ் மக்கள் அவரைக் கருதுகிறார்கள். அந்தக் குறியீட்டின் மீது தமது அனுமதியின்றி யாராலும் கைவைக்க முடியாது என்று வடமாகாணம் எங்கிலும் தன்னிச்சையாக திரண்டு உலகுக்கு பறை சாற்றியுள்ளார்கள்.

முள்ளிவாய்க்காலோடு எமது போராட்டம் முடிந்து போகவில்லை, நாம் விழிப்புடன் தான் உள்ளோம் என்பதனை மீள உறுதிப்படுத்தி இருக்கிறது இந்த மக்கள் எழுச்சி. என்னை நீக்குவதற்கு தெற்கில் சதித்திட்டம் என்கிற முதலமைச்சரின் கூற்றை நாம் சாதாரணமாக கடந்து போக முடியாது.

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 21.06.2017 அன்று ஜெயசிறீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.